பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (15-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:231

# பல்கலைக்கழக விவகாரம்: முன்னேற்றம் ஏதுமில்லை!

## மக்கள் மத்தியில் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

**யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டமை, யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டமை மற்றும் அதையடுத்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்கள் செயலிழந்தமை ஆகியவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை.**

**கடந்த இரு வாரங்களாக இழுபடும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பில் சிரத்தை எடுக்கப்படாதது குறித்து பொதுமக்கள் மத்தியில் பெரும் எரிச்சலும் விசனமும் ஏற்பட்டுள்ளது.**

கடந்த 2ஆம் திகதி மாலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் திவ்வியன் கைது செய்யப்பட்டார். இதை ஆட்சேபித்து 4ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர்.

கடந்த 9ஆம் திகதி பல்கலைக்கழகத்தை மூடுவதாகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை கல்விசாரா ஊழியர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுதலை செய்ய வேண்டும் என்றும் -

யாழ். பல்கலைக்கழகத்தை மீளத் திறக்கவேண்டும் என்றும் -

கோரி பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் பிற்பகல் 4.00 மணி வரை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் ஒரு தொகுதி கல்விசாரா ஊழியர்கள் பங்குபற்றினர். சில விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர்.

(ம-3-4-10-86-173)

## நாடாளுமன்றம் கூடுவது குறித்து சபாநாயகர் இன்று அறிவிப்பார்!

கொழும்பு,ஜூலை15

நாடாளுமன்றத்தை நாளை கூட்டுவதா இல்லையா என்பது குறித்த அறிவிப்பை சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க இன்றே அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் சபாநாயகரைச் சந்தித்து நடத்திய பேச்சுக்களின் போது நாளை நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பான அறிவிப்பை நேற்று விடுப்பதாக சபாநாயகர் உறுதி வழங்கியிருந்தார்.

இது தொடர்பான அறிவிப்பை இன்று விடுப்பதாக அவர் நேற்று ஐ.தே.கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை -

நாளை தாங்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லவிருப்பதாகவும் -

உள்ளே செல்லத் தமக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-3)

## நாடாளுமன்ற ஒத்திவைப்புக் குறித்து மக்கள் ஐக்கிய முன்னணி அதிருப்தி

### அரசிலிருந்து வெளியேறவும் கூடும்

கொழும்பு,ஜூலை15

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமைக்கு அரசில் அங்கம் வகிக்கும் மக்கள் ஐக்கிய முன்னணி அதிருப்தி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்று எம்.பிக்களைக் கொண்டுள்ள இந்த முன்னணி அதிருப்தி காரணமாக அரசில் இருந்து வெளியேறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி முன்னணியின் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்ற சமயம், அரசின் முடிவு குறித்து ஆராயப்பட்டது. அது குறித்து தனது கடும் அதிருப்தியையும் முன்னணி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை ஒத்திவைத்த அரசின் செயலுக்கு கூட்டத்தில் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

### தற்கொலை குண்டுதாரியின் அங்கிகள் மீட்பு

வவுனியா,ஜூலை15

வவுனியா சிதம்பரபுரம் காட்டுப் பகுதியில் இருந்து தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் இரு அங்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

மக்கள் கொடுத்த தகவலின் பேரில் கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் இந்த அங்கிகளைக் கண்டுபிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-164)

### விபத்தில் பெண் பலி!

யாழ்ப்பாணம்,ஜூலை15

சிறுப்பிட்டியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் யாழ் செயலக ஓய்வூதியக் கிளை ஊழியரான எஸ்.ஸ்ரீவள்ளிநாயகி (வயது 42) என்ற பெண் உயிரிழந்தார்.

பிரஸ்தாப பெண் சைக்கிளில் வந்த சமயம் இந்த விபத்து இடம்பெற்றது என்றும் -

லொறியின் சாரதியும் அவரது உதவியாளரும் லொறியை விட்டு விட்டுத் தப்பி ஓடிவிட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது. (ம-3-9-173)

### படையினரின் தாக்குதலில் சிறுவன் காயம்

வவுனியா,ஜூலை15

வவுனியா இளம்மருதகுளம் பகுதியில் பதுங்கி இருந்த படையினர் நடத்திய தாக்குதலில் பாடசாலை மாணவர் ஒருவர் காயமடைந்தார்.

நட்டாங்கண்டலைச் சேர்ந்த காராளசிங்கம் விஜயகாந்த்(வயது 14) என்ற சிறுவனே காயமடைந்தவராவார். இவர் தற்போது மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-164)

### புலிகளின் தாக்குதலில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஜூலை15

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் நேற்று முன்தினம் இரவு ஒரு மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; இரு படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

(ம-3-9)

### திவ்வியனை அமைச்சர் சந்தித்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை15

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணசாமி திவ்வியனை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று சந்தித்துப் பேசியதாக அந்த அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்றில் தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று - திருக்கோயில் வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல்4.00 மணியளவில் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலைப் பதில் தாக்குதல் நடத்தி அதிரடிப் படையினர் முறியடித்தனர் என்றும் - இந்தத்தாக்குதலை அடுத்து அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் பல ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-3)



பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரும் அதிபருமான ஜெனரல் பர்வேஷ் முஷாரப் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவதற்காக நேற்று இந்தியா வந்து சேர்ந்தார். நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் ஜெனரல் முஷாரப்புக்கு சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பாய் ஜெனரல் முஷாரப்பை கை குலுக்கி வரவேற்பதையும், அருகில் இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் ஆகியோர் மகிழ்ச்சியுடன் அவதானித்துக் கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

## நான்கு பிள்ளைகளின் தாய் மீது துப்பாக்கி முனையில் வல்லுறவு

### இளவாலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

இளவாலைப் பகுதியில் பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியிலுள்ள வீட்டிலிருந்த நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் துப்பாக்கி முனையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எனத் தெரிவிக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு முதல் கணவனைப் பிரிந்து நான்கு பிள்ளைகளுடனும் மீசாலையில் வசித்து வந்த இவர் தற்போது இடம்பெயர்ந்து இளவாலையில் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு 35

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் கொல்லப்பட்டதை எதிர்த்து கல்முனை நகரில் நேற்று ஹர்த்தால்

அம்பாறை,ஜூலை15

கல்முனை நகரில் நேற்று முன்தினம் மாலை இரு முஸ்லிம் மாணவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான சம்பவத்தைக் கண்டித்து நேற்று அங்கு ஹர்த்தாலும், பேரணியும் இடம்பெற்றன.

கல்முனை சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை, மாளிகைக்காடு ஆகிய பகுதிகளில் மேற்கொளளப்பட்ட ஹர்த்தால் காரணமாக அந்தப் பிரதேசங்களில் சகல சேவைகளும் ஸ்தம்பித்தன.

கல்முனையில் இருந்து மாளிகைக்காடு வரை பொலீஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது. முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து பல முஸ்லிம் அமைப்புக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

"இஸ்ரேல் இந்த நாட்டில் காலடி எடுத்து வைத்த பின்னரே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர்களின் உந்துதலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது" என்று அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

## பொதுமக்கள் - பொலீஸார் கல்முனையில் நேற்று மோதல்

கல்முனையில் நேற்றுமுன்தினம் மாலை இரு முஸ்லிம் இளைஞர்கள் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து நேற்று கல்முனை, மருதமுனை ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன.

கல்முனை நகரில் பொலீஸார் மீது பொதுமக்கள் கற்களை வீசியதையடுத்து பதிலுக்குப் பொலீஸாரும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் அப்பகுதிகளில் பதற்றம் காணப்பட்டது. நிலைமையை கட்டுப்படுத்த மேலதிக பொலீஸார் இப்பகுதிகளில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் என தெரிந்திருந்தும் அவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என கல்முனை பிரதேச வாசிகள் பொலீஸார் மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(ம-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கல்விச் செயற்பாடு ஸ்தம்பித்த பின்பும் அரசு பாராமுகமாக இருக்கின்றது

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை15

வடக்கு - கிழக்கில் கல்வி நடவடிக்கைகள், கல்விசார் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப்போயுள்ளன. இத்தகைய இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையில் பொறுப்புள்ள அரசு அக்கறையின்றி பாராமுகமாக இருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்வாறு குற்றஞ்சாட்டி உள்ளது.

ஒன்றியம் நேற்று விடுத்த அறிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான திவ்வியன் மீதான அரச படைகளின் கைது நடவடிக்கையினை எதிர்த்தும் திவ்வியனை உடனடியாக விடுவிக்கக் கோரியும் முழுத் தமிழ்ச சமூகமும் அரசின் இத்தகைய இனவாத செயற்பாட்டிற்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளது. இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து பலகலைக்கழகங்களும் ஒரு தமிழ் மாணவனுக்கு - ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு - மக்களின் நலனுக்காக செயற்பட்ட ஒரு தமிழ் மகனுக்கு - சம்பவித்திருக்கின்ற மனித உரிமைக்கு மாறான அரசினது நடவடிக்கையினைக் கண்டித்து ஒன்று திரண்டுள்ளன. இது மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசினது அராஜகத்திற்கு எதிரான செயற்பாட்டினை - பழிவாங்கும் நோக்குடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கைதினை - எதிர்த்து யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும், பாட சாலைகளும் தமது கல்விச் செயற்பாட்டினை தொடர்ச்சியாக பகிஷ்கரித்து வருகின்றன.

வெளிப்பகட்டுக்காக மக்களின் நலன்களில் அக்கறையுள்ளதாக குழலூதுகின்ற அரசாங்கத்தின், மாணவர்கள் மீதான மனித உரிமை மீறல் செயற்பாடுகளினால் இன்று வடக்கு - கிழக்கு தமிழ் பிரதேசம் எங்கும் கல்வி நடவடிக்கைகள், கல்விசார் நிர்வாகச் செயற்பாடுகள் ஸ்தம்பித்து போயுள்ளன. இத்தகைய இக்கட்டான - சிக்கலான - சூழ்நிலையில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றி சற்றேனும் அக்கறையின்றி பாராமுகமாக இருக்கின்றது. மாணவர்களின் தவணைப் பரீட்சைகள், உயர்தரப் பரீட்சைகள் நெருங்கி வருகின்ற இந்தக் காலப்பகுதியில் அரசினது இந்தப் பாராமுகமான செயற்பாடு அரசின் மீதான நம்பிக்கையீனத்தை மேலும் வலுப்படுத்தி வருகின்றது. இன்று அனைத்தையும் இழந்து அநாதைகளாக நிற்கின்ற தமிழ் மக்களின் ஒரேயொரு செல்வம் கல்விச் செல்வமே. இன்று அரச படைகளினது, பல்கலைக்கழக மாணவன் மீதான கைது நடவடிக்கையினால் இது முற்றிலும் செயலிழந்து போயுள்ளது. ஆனால் குடாநாட்டு மக்களை சிறைப்படுத்தி வைத்திருக்கின்ற அரசாங்கம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்ச நிலையையும், குழப்ப நிலையையும் மேலும் சிக்கலாக்கும் வழிகளில் செயற்பட்டு வருவதுடன் அதற்கு சார்பாக பத்திரிகை அறிக்கைகளையும் விடுத்து வருகின்றது. நேற்றைய தினப் பத்திரிகையில் படைத்தரப்பு தமது அனைத்து அராஜகங்களையும் நியாயப்படுத்தி பல்கலைக்கழகத்தின் அனைத்து செயற்பாடுகளையும் முற்றிலும் தவறானது எனக் குறிப்பிட்டிருந்தது. இலங்கை அரசினைப்பற்றி, அதன் ஆயுதப் படைகளைப்பற்றி பல்கலைக்கழக மாணவர்களை விட அவற்றால் ஏற்பட்ட ஆறாத வடுக்களை சுமந்து வாழும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் நன்றாகத் தெரியும். நாம் சொல்லிப் புதிதாகப் புரிய வேண்டிய தேவை எமது மக்களுக்கு இல்லை.

இன்று வடக்கு - கிழக்கில் பெரும் பூகம்பமாக உருவாகியிருக்கும் மாணவர் போராட்டம் இன்னும் பலமடங்கு விஸ்வரூபம் எடுக்கும் சூழ்நிலையை அரச படைகள் ஏற்படுத்தி வருகின்றன.

புலிகளின் வற்புறுத்தலினாலும் புலிகளின் பின்னணியிலும் இருந்து செயற்பட்டு பல்கலைக்கழக நிர்வாகத்தையும் மாணவர்களின் கல்வியையும் சீரழிக்க முற்பட்டு வருகிறார்கள் என மக்கள் மத்தியில் விசமப் பிரசாரத்தினை மேற்கொண்டு அதிகாரிகளையும் மாணவர்களையும் அரசபடைகள் அச்சுறுத்தி வருகின்றன. கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவிகளின் விடுதியில் உள்ள விடுதிப் பாதுகாவலர்களையும் அத்துமீறிப் புகுந்த ஆயுதப்படையினர் விடுதியின் உட்பகுதியினுள் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை கிழித்தெறிந்து மாணவிகளின் மத்தியில் பெரும் அச்சம் உருவாகும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

எமது போராட்டத்திற்கு பதில் கிட்டும்வரை பல்கலைக்கழக பகிஷ்ரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அன்புக்குரிய மக்களே! மாணவர்களே!! எமது போராட்டத்திற்கு உங்கள் முழுமையான ஆதரவை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம். மறுஅறிவித்தல்வரை உங்களது ஒத்துழைப்பு தொடர்ச்சியாக எமக்குக் கிடைக்கும் என நம்புகின்றோம். எமது மாணவச் செல்வங்களின் கல்விச் செயற்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவையிட்டு பல்கலைக்கழக மாணவராகிய நாம மிகவும் மனம்வருந்துகின்றோம். எமது இளம் சமுதாயத்தினர் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழகம் புகுந்து இத்தகைய இராணுவத்தினரின் இரும்புப் பிடிக்குள் சிறைப்பிடிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. ஆகவே இந்த விடயத்தில் அச்சமான நிலைக்கும் நிச்சயமற்ற நிலைக்கும் உள்ளாகியிருக்கும் மக்களுக்கு திவ்வியனின் விடுதலையே ஒரு நல்ல சமிக்ஞையாக அமையும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# மாணவர் மீதான அடக்குமுறைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ். பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மாணவர்களின் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறை நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். என்று புதிய ஜனநாயகக் கட்சி கோரியுள்ளது.

அந்தக் கட்சியின் செயற்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு வருவதையும், அதன் காரணமாக மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்க காலவரையறையின்றி யாழ்.பல்கலைக்கழகத்தை மூடிக்கொண்ட செயலையும் எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

குடாநாட்டிலும் வவுனியாவிலும் கிழக்கிலும் மாணவ மாணவியர்களின் பரந்த எதிர்ப்புகளுக்குக் காரணமாக அமைந்த மேற்படி பிரச்சினையில் தடுத்து வைக்கப்பட்ட மாணவன் திவ்வியனை விடுதலை செய்து யாழ்.பல்கலைக் கழகத்தை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் ஆவார். நெருக்கடியான தருணங்களில் மக்களுக்கும் மாணவர்களுக்கும் பணிபுரிவதில் முன்னின்றவர்களில் ஒருவர். அவரைப் போனற மாணவர்கள் மீது ஏற்கனவே படையினருக்கு கண்ணும் கருத்தும் இருநது வநதுள்ளது. எனவே பல்கலைக்கழக மாணவர்கள் பழிவாங்கல்களுக்கு ஆளாக்கப்படுவது ஆரம்பித்துவிட்டது. என்னும் வினா எழுந்துள்ளது. அதனால் பல்கலைக்கழகங்களினதும் பாடசாலைகளினதும் மாணவ மாணவிகளை விரக்திக்கும் வேதனைகளுக்கும் உள்ளாக்காது அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறை நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும் எனப் புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்துகின்றது

- என்றுள்ளது. (ஐ-3)


பிரமாண்டமான மின் ஒளியில் நவீனமயமான

மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

(பூங்கன்றுகளும் கனிமரங்களும்)

பூங்கனிச் சோலைக்குள் ஒரு

பூங்கனிப் பூங்கா

ஜூலை 21,22,23 ஆம் திகதிகளில்

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரையும்

இடம்:- திருநெல்வேலி, முடமாவடி.

அனைவரையும் கண்டுகளிக்க வருமாறு

(90110) அன்புடன் அழைக்கின்றோம். T.P 2976


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரஞ்சோதி சிவயோகம் (மணி)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி சிவயோகம் நேற்று (14.07.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பரஞ்சோதியின் (முன்னாள் வர்த்தகர், பாணந்துறை) அன்பு மனைவியும் உமாதேவி, உருத்திரமூர்த்தி, மகாதேவன், சோதிநாதன், வேதநாயகி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.பரஞ்சோதி
(கணவர்)

*மணற்பிட்டி,*
*காரைநகர்.* (90120)

### கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி (பாமா)

(இலிகிதர், ஓய்வூதியக் கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம்.)

புத்தூர் மேற்கு, சிவன்கோயிலடியைச் சேர்ந்த கந்தையா ஸ்ரீவள்ளிநாயகி நேற்று (14.07.2001) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் புத்திரியும் தர்மராசசிங்கன், பராசக்தி, சரவணபவானந்தன் (லங்கா சிமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை) ஆகியோரின் சகோதரியும் மனோகரி, சிவானந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் கோகுலரமணன், கபிலன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் கிந்துவிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க.சரவணபவானந்தன் (பவா)
(சகோதரன்)

*சிவன்கோயிலடி,*
*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.* (90121)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
8 . 12 . 1949



ஆண்டவன் அரவணைப்பில்
15 . 7 . 1999

### அமரர் தம்பித்துரை கமலநாதன்

(இயக்குநர் - நொதோன் மோட்டோர்ஸ் வேக்ஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் இரண்டறக் கலந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறவில்லை உம் பிரிவு.
**உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்**

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (C-17439)

பெற்றோர், மனைவி,
மக்கள், சகோதரர்கள்.

### மாட்டு வண்டி சவாரி

யாழ்ப்பாணம்,ஜூலை15

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கந்தரோடை சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-4)

### மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

வலி.வடக்கு,ஜூலை15


யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் புதிய மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான வாய்மொழி மூலப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த 21 பேர் இப்பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-86)

### முதல் திருப்பலி

யாழ்ப்பாணம்,ஜூலை15

நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தைச் சேர்ந்த அருட்திரு சி.அருட்செல்வன் அடிகளார் இன்று மாலை 5.00 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் தனது முதல் திருப்பலியை நிறைவேற்றவுள்ளனர். (-7)



இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்

**யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத**

**ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான விஷு வருட (2001)**



*தேவி மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரமாகிறது.*

"மணியே மணியி னொளியே யொளிரு மணி புனைந்த
அணியே. யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்த பின்னே"

- திரு.கனகசபை தர்மகுலசிங்கம்,
பழமுதிர்சோலை, காரைநகர்.

*சிவன் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.* (90116)


தமது அதிபர் ஜெனரல் முஷாரப்பின் பயணம் வெற்றியடைய புறாக்களைப் பறக்கவிடும் பாகிஸ்தானியர்.


பிரதமர் வாஜ்பாய் - ஜெனரல் முஷாரப் பேச்சினால் தமது மண்ணில் அமைதி பிறக்க காஷ்மீரிகள் பிரார்த்தனை.

## புதுடில்லி விமான நிலையத்தில்
# ஜெனரல் முஷாரப்புக்கு சிறப்பான வரவேற்பு

புதுடில்லி, ஜூலை15

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆக்ரா உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை புதுடில்லி 'பாலம்' விமானநிலையத்தில் வந்திறங்கிய பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப்புக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் ஜெனரல் முஷாரப் பேசினார்.

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவும் பிணக்குகளைத் தீர்க்க திறந்த மனத்துடன் பேச்சு நடத்த வந்திருப்பதாக ஜெனரல் முஷாரப் அப்போது தெரிவித்தார்.

பிரதமர் வாஜ்பாய் உட்பட இந்தியத் தலைவர்களுடன் நடத்தவுள்ள முன்னேற்றகரமான பேச்சுக்கள் மூலம் இரு நாடுகளிடையேயும், அமைதியான பதற்றமற்ற உறவை ஏற்படுத்த முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தியா - பாகிஸ்தான் உறவுகளில், காஷ்மீர் பிரச்சினை ஒரு கருநிழலாகப் படிந்துள்ளதாகவும் -

ஆக்ரா உச்சி மாநாடு அதனை அகற்றும் என்றும் -

ஜெனரல் முஷாரப் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனத்தின் போயிங் விமானம் மூலம் புதுடில்லி 'பாலம்' விமானம் நிலையத்தில் வந்திறங்கிய ஜெனரல் முஷாரப், அவரது துணைவியார் பேகம் முஷாரப் மற்றும் குழுவினருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஒ)


ஜெனரல் முஷாரப்பின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, புதுடில்லியில் அவரது கொடும்பாவி எரிப்பு.


புதுடில்லி நஹர்வாலி கவேலில் முஷாரப் பிறந்த வீடு. பாகிஸ்தான் பிரிவினை வரை முஷாரப் குடும்பத்தினர் இங்குதான் வசித்தனர்.

## வீட்டுக் காவலில் காஷ்மீர் தலைவர்

ஸ்ரீநகர்,ஜூலை15

காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களில் ஒருவரான ஜம்மு காஷ்மீர் ஜனநாயகக் கட்சித் தலைவரான பதின்ஷா வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பின் இந்திய வருகையை முன்னிட்டே இவரது வீட்டைச் சுற்றி இந்திய இராணுவம் முற்றுகையிட்டு, அவரை வீட்டுக்காவலில் வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

## ஜப்பான் கடலில் கப்பல்கள் மோதல்

டோக்கியோ,ஜூலை15

ஜப்பானியக் கடற்பகுதியில் ஜப்பான் நாட்டுக்குச் சொந்தமான வாயு 'டாங்கர்' கப்பலுடன் வடகொரியச் சரகுக் கப்பல் மோதியதில், 17 பணியாளர்களுடன் வடகொரியக் கப்பல் கடலில் மூழ்கியது. மூழ்கிய கப்பலிலிருந்து பணியாளர்களை மீட்கும் பணிகள் இடம்பெறுகின்றன. ஜப்பானியக் கப்பலில் இருந்து வாயு கசியும் ஆபத்தைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ-4)

## பழ.நெடுமாறன் கேள்வி

சென்னை,ஜூலை15

கன்னட நடிகர் ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட பின்னர், சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் இலங்கை சென்று விட்டதாக அறிக்கை விட்ட ஜெயலலிதா, வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படைத் தலைவர் தேவாரததை இலங்கைக்கு அனுப்பாதது ஏன்?

இவ்வாறு தமிழர் இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் -

வீரப்பன் இலங்கையில் இருந்தாலும், தேவாரத்தை அதிரடிப்படையுடன் அங்கு அனுப்ப ஜெயலலிதாவால் முடியுமா என்று கேள்வி எழுப்பியுள்ள நெடுமாறன், வீரப்பன் சரணடைய முன் வந்தால், பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

வீரப்பனைப் பிடிக்கும் பணிக்காக இதுவரை 300கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் -

இதில் மக்கள் வரிப்பணமே விரயமாகிறது என்றும் -

பழ.நெடுமாறன் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

## அமெரிக்க நிலைகள் மீதான தாக்குதல் அபாயம்

வாஷிங்டன்,ஜூலை15

அடுத்துவரும் 5 வருடங்களிலும வெளிநாடுகளில் இருக்கும் அமெரிக்க நிலைகள் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறுமென அமெரிக்க மத்தியப் புலனாய்வுப் பணியகம் (எப்.பி.ஐ.) எச்சரித்துள்ளது. வருடத்துக்கு ஒரு தாக்குதல் என்ற அடிப்படையில் எதிர்வரும் 5 வருடங்களுக்கு இத்தகைய தாக்குதல்கள் அமெரிக்க நிலைகள் மீது மேற்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாக எப்.பி.ஐ. உதவிப் பணிப்பாளர் டேல் வாட்ஸன் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## இராணுவத்துடனான முதல் மோதலில்
# நேபாளத்தில் தீவிரவாதிகள் ஹெலியைச் சுட்டுவீழ்த்தினர்

காத்மண்டு,ஜூலை15

நேபாளத்தில் மாவோயிஸ தீவிரவாதிகள் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்றைச் சுட்டுவீழ்த்தினர்.

மேற்கு நேபாளப் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட இந்த ஹெலிகொப்டரில பயணம் செய்த 3 இராணுவ அதிகாரிகள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து தீவிரவாதிகளும் இராணுவமும் மோதிக்கொண்டதில் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன.

மாவோயிஸ தீவிரவாதிகளுடன் நேபாள இராணுவத்தினர் நேருக்கு நேர் மோதியது இதுவே முதற்றடவையாகும்.

கடந்த வியாழக்கிழமை ஹொலி கிராமத்தில் பொலிஸ் நிலையம் ஒன்றைத் தாக்கிய மாவோயிஸ தீவிரவாதிகள் ஒரு பொலிஸ்காரரைக் கொன்றதுடன், 71 பொலிஸ்காரர்களையும் கடத்திச் சென்றனர்.

இந்தச் சம்பத்தின் போது, 71 பொலிஸாரும் தீவிரவாதிகளிடம் ஆயுதங்களுடன் சரணடைந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களைத் தற்போது தீவிரவாதிகள் ரகசிய இடமொன்றில் பணயக்கைதிகளாக வைத்துள்ளனர்.

அத்துடன், காத்மண்டு அருகே பானம்பாவில் உள்ள உள்ளூர் கூட்டுறவு மையத்தைத் தாக்கி 3 இலட்சம் நேபாள ரூபாக்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

இவற்றையடுத்து, மாவோயிஸ தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் நேபாள இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது.

ஆனால் பணியில் ஈடுபட்ட உடனேயே தீவிரவாதிகளின் தாக்குதலில் நேபாள இராணுவம் ஹெலிகொப்டரை இழந்துள்ளது. (ஒ-4)

# இஸ்ரேல் - பலஸ்தீன மோதலால் ஹெப்ரோன் நகரம் அதிர்கிறது!

காஸா,ஜூலை15

மேற்குக் கரை நகரான ஹெப்ரோனில் பலஸ்தீனருக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே கடும் சண்டை மூண்டுள்ளது. அமெரிக்காவின் முன் முயற்சியால் நடைமுறைப்படுத்தப்பட்ட யுத்தநிறுத்தம் இந்த மோதல்களையடுத்து முற்றாக முறிவடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஹெப்ரோனில் பலஸ்தீனர்களின் படைத்தலைமையகம் மீது நேற்றுமுன் தினம் இரவு இஸ்ரேலிய இராணுவத்தினர் கடும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் -

இதன் காரணமாக பல பலஸ்தீனர்கள் காயமடைந்ததாகவும் -

பலஸ்தீனத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இஸ்ரேலியப் பீரங்கிகள் ஹெப்ரோனுக்குள் நுழைந்ததை தொடர்ந்து, அந்த நகரம் குண்டு வெடிப்புகளால் அதிர்வதாகவும் நகர் முழுவதும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், மருத்துவமனைகளை நோக்கி அம்புலன்ஸ்கள் உட்பட வாகனங்கள் விரைவதாகவும் சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

உலக அரங்கில்

ஹெப்ரோனில் யூதக் குடியிருப்பொன்றின் மீது பலஸ்தீனர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு யூதர்கள் கொல்லப்பட்டதையடுத்தே மோதல்கள் வெடித்துள்ளன.

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டுள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் மத்திய கிழக்கில் யுத்தமொன்றிற்கான சாத்தியக் கூறுகள் இல்லையெனத் தெரிவித்து வரும் வேளையில் ஹெப்ரோனில் பாரிய அளவில் மோதல்கள் வெடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மேற்காசிய வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் மகனும் மேற்குக் கரை நகரமொன்றில் சந்தித்துப் பேச உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# பங்களாதேஷ் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கலைப்பு!

டாக்கா,ஜூலை15

பங்களாதேஷ் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் இரவு அதிபர் சலவுதீன் அகமட்டால் கலைக்கப்பட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமிலீக் அரசின் ஐந்தாண்டு ஆட்சிக் காலம் நிறைவுபெற்றது.

பங்களாதேஷின் தேர்தல் விதிகளின்படி, அடுத்த 90 நாள்களுக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படும் பொதுத தேர்தலின் பின்னர் புதிய அரசு பொறுப்பேற்கும் வரை, நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக, தலைமை நீதிபதி தலைமையில் கட்சிசார்பற்ற காபந்து அரசு அமைக்கப்பட உள்ளது.

பங்களாதேஷ் தலைமை நீதிபதி லதீபூர் ரஹ்மான் தலைமையிலான காபந்து அரசு ஓரிரு நாள்களில் பதவியேற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாகவே ஷேக ஹசீனா பதவி விலகவேண்டும் என்று கோரி பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் வேலைநிறுத்தம் உட்பட பலபோராட்டங்களை நடத்திவந்தன.

உயிரிழப்புகள், பொருள் சேதங்களை ஏற்படுத்திய இந்தப் போராட்டங்களின் பின்னர், இன்றுடன்தான் பதவி விலகுவதாக ஷேக் ஹசீனா முன்னர் அறிவித்திருந்தார்.

பங்களாதேஷில் நாடாளுமன்றம் ஒன்று, முழு 5 ஆண்டுப் பதவிக் காலத்தை நிறைவு செய்திருப்பது இதுவே முதல் தடவை. (ஒ-4)

# திருப்பதிக்கு 'இன்ரநெற்' மூலம் காணிக்கை

திருப்பதி,ஜூலை15

திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமாளுக்கு 'இன்ரநெற்' மூலம் பக்தர்கள் காணிக்கைகளைச் செலுததும் வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

வெளிநாடுகளில் வாழும் பக்தர்கள், குறிப்பாக வெள்ளை இனத்தவர்கள் வெங்கடேஸ்வரப் பெருமாளுக்கு காணிக்கை செலுத்த 'இன்ரநெற்' வசதியை ஏற்படுத்துமாறு திருப்பதி திருமலை தேவஸ்தானத்திடம கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த வேண்டுகோளையடுத்து, வங்கியொன்றுடன் இணைந்து திருப்பதி திருமலை தேவஸ்தானம் 'இன்ரநெற்' மூலம் காணிக்கைகளை வழங்க பக்தர்களுக்கு வசதியேற்படுத்த முடிவு செய்துள்ளது.

திருப்பதி வெங்கடேஸ்வரருக்கு ஆண்டுதோறும் சுமார் 400கோடி ரூபா மதிப்புக்கு நகைகள், வைரங்கள் உட்பட காணிக்கைகள் பக்தர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-4)

## காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்புக்கு இந்தியா மறுப்பு

புதுடில்லி,ஜூலை15

காஷ்மீர் பிரச்சினை குறித்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் தெரிவித்த யோசனையை இந்தியா முற்றாக நிராகரித்து விட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஒ-4)

## ஆப்கானிய ஆயுதக் குழுக்களுக்கு கண்டனம்

ஜெனீவா,ஜூலை15

ஆப்கானிஸ்தானில் ஆயுதக் குழுகளின் செயற்பாடுகளைக் கண்டித்து மனித உரிமை அமைப்புகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும் என்றும் அவை கோரியுள்ளன.

ஆளும் தலிபான்களுக்கு பாகிஸ்தான், சவூதிஅரேபியா போன்ற நாடுகளும், தலிபான்களுக்கு எதிரான அமைப்புகளுக்கு ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளும் போட்டி போட்டு உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிவித்தன. (ஒ-4)

## சட்டவிரோத பயண ஆபத்தை விளக்கும் படம்

மெக்ஸிக்கோ,ஜூலை15

மெக்ஸிக்கோ நாட்டிலிருந்து அமெரிக்காவினுள் சட்டவிரோதமாக நுழைவோருக்கு சட்டவிரோதப் பயணத்தின் ஆபத்துக்களை விளக்கும் வகையில் "நீங்களாகவே ஆபத்துக்களைத் தேடிக்கொள்ளாதீர்" என்ற தலைப்பில் காண்பிக்கப்படும் விவரணத் திரைப்படங்களில் இப்பயணத்தின் போது ஏற்படும் கஷ்டங்கள் பற்றி விளக்கப்படுகிறது.

## வடஅயர்லாந்தில் 55 பொலீஸார் காயம்

பெல்பாஸ்ட்,ஜூலை15

வட அயர்லாந்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளில் 55 பொலீஸார் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

பெல்பாஸ்டில் கத்தோலிக்கர்கள் அதிகம் வாழும் பகுதியூடாக புரட்டஸ்தாந்துகள் ஊர்வலம் சென்றதாகவும் -

பாதுகாப்புத் தடைகளை மீறி கத்தோலிக்க இளைஞர்கள் ஊர்வலத்தை நெருங்க முயற்சித்ததாகவும் -

அப்போது அவர்களைப் பொலீஸார் தடுக்க முயன்ற போது மோதல்கள் வெடித்ததாகவும் - கூறப்படுகிறது.

பொலீஸார் மீது கத்தோலிக்க இளைஞர்கள் கற்கள், போத்தல்கள் மற்றும் பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். வாகனங்களும் தீக்கிரையாகின. றப்பர் தோட்டாக்களை சுட்டும், தண்ணீரை விசிறியடித்தும் வன்முறையாளர்களைப் பொலீஸார் விரட்டினர்.

இந்த மோதலில் பொலீஸ்காரர் ஒருவர் கோடரி வெட்டுக்கு இலக்காகி, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ)

# பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கு மேலும் பல அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டதைக் கண்டித்தும், மாணவன் திவ்வியனின் விடுதலையை வற்புறுத்தியும் மேலும் பல அமைப்புக்கள் பத்திரிகைச் செய்திக் குறிப்புக்களை விடுத்துள்ளன.

அவை வருமாறு:-

### சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனது கைது செய்யப்பட்டமை தொடர்பான பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் கண்டு, மூடப்பட்டுள்ள உயர்கல்வி நிலையமான யாழ். பல்கலைக்கழகத்தை மாணவருடைய கல்வி மேம்பாட்டுக்காக உடனடியாகத் திறந்து செயற்பட வைக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அனைவரையும் நாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அண்மையில் தென் இலங்கையிலிருந்து யாழ். வருகை தந்த சமாதானக் குழுக்களோடு எமது மக்களினதும், பிரதேசத்தினதும் அமைதிக்காக சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டுமென்பதற்காக எமது அமைப்பும், சர்வதேச இந்துமத குருபீடாதிபதியும் உரிய நல்லெண்ண முயற்சிகளைமேற்கொண்டிருந்தனர்.

அத்தகையசமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனது கைதும், அது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ள செய்தியும் எமக்கு அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் தருகின்றது.

இத்தகைய நிகழ்வினால் எமது பிரதேசத்தில் அமைதியின்மை ஏற்படக் கூடிய சூழ்நிலையைத் தவிர்த்து மாணவர் மத்தியியே நம்பிக்கையை ஏற்படுத்தும் வண்ணம் ஏற்ற வழிகளைக் காணுமாறு இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மிக்க விநயமாகக் கேட்டுக் கொள்கிறது.

### லங்கா சித்தஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும், முன்னாள் மாணவர் மன்ற செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டதையும், தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்களது ஜனநாயக செயற்பாடுகளால் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமையையும் அறிந்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

பல்கலைக்கழகம் திறக்கப்பட்டு விரிவுரைகள் சுமுகமாக நடைபெறும்வரை நாம் எமது விரிவுரைகளைத் தொடர்ந்தும் பகிஷ்கரித்து பூரண ஆதரவை வழங்கவுள்ளோம்.

### கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயக ரீதியில் சக மாணவனை விடுவிக்கக் கோரியதைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழகம் அரசினால் திட்டமிட்டு மூடப்பட்டது தமிழ் இனத்துக்கு செய்யப்பட்ட பெரும் அநீதியாகும்.

இந் நிகழ்வானது அனைத்து தமிழ் பேசும் மக்களது வாழ்க்கையையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. அரசு தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தும் அநீதிகளில் ஒன்றாக யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது. அரசின் சுயரூபத்தை இது வெளிக்காட்டியுள்ளது.

இந் நிலையில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒன்றுதிரண்டு எமக்கு இழைத்த அநீதிக்காக குரல்கொடுக்கும் வேளை வந்துள்ளது.

அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஒன்றுதிரண்டு யாழ். பல்கலைக்கழகத்தை திறந்து, தமிழ் பேசும் மாணவர்களின் உயர்கல்வி தொடர குரல் கொடுப்போம்.

இது காலம் காலமாக தமிழ்ச் சந்ததியினர் தம் உயர் கல்வியைத் தொடர நாம் செய்யும் தொண்டாகவும் அமையும்.

### பலாலி ஆசிரியர் கலாசாலை

மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனின் கைது தொடர்பாக எழுந்திருக்கும் சூழ்நிலை, கல்விச் சமூகத்தைப் பெரும் விசனத்திற்குள்ளாக்கியிருக்கின்றது.

திவ்வியனின் கைதைக் கண்டித்து அவரது விடுதலையைக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயக ரீதியாக மேற்கொண்ட போராட்டத்தை வலுப்பெறச் செய்யாது, தடுக்கும் நோக்குடன் பல்கலைக்கழகத்தை காலவரையின்றி மூடுவதற்கு அரசு எடுத்த முடிவானது, எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

எமது கல்விச் சமூகத்தின் உயர் கல்வி நிறுவனமாக விளங்கும் யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டது எது பிரதேசத்தின் கல்விச் செயற்பாட்டை பாழடிக்கும் ஒன்றாகவே கருதி இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனவே கைது செய்யப்பட்ட மாணவன் திவ்வியன் தொடர்பாக சுமுகமான ஒரு தீர்வைக் கண்டு பல்கலைக்கழகத்தை மீண்டும் விரைவாகத் திறக்க அரசைக் கோருகின்றோம்

.(ஐ-7-9)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 — 11 — 1939

உதிர்வு 28 — 06 — 1989

**அமரர் கந்தையா குலேந்திரா**

S.L.A.S.

(உதவி அரசாங்க அதிபரும், வலி. கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளரும்)

**திதி:- 15-07-2001**

கண்ணெதிர் காவலராய் வாழ்ந்திருந்து
கண்ணிரண்டு மிமைகாப்பது போலிருந்து
பண்புடையார் பாராட்டியகாலை— நீர்பிரிந்து
பன்னிரண்டாண்டானதே பாரினில்.

மனைவி— கு. சிவஈஸ்வரி,
மகன் — கு. சிலேந்திரம்,
சகோதரர்கள்.

'ஈஸ்வரி வாசா'
நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில்.

(90061)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 — 05 — 1936

உதிர்வு 15 — 07 — 1991

**அமரர் கணபதி செல்வராஜா**

(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் - காங்கேசன்துறை)

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
எனும் வண்ணம் இனிதே வாழ்ந்தீர்!
பேரோடும் புகழோடும் பெருமையாய்ப் பலர் மதிக்க
வாழ்வாங்கு வாழ்ந்தெம்மை வாழவைத்த
எம் தந்தையே!
பத்தாண்டுகள் நிறைவாகும் இந்நாளும் எந்நாளும்
தீராது அன்புடனே சிந்தை வைத்து
வணங்குகின்றோம்...!

நீங்காத நினைவுகளுடன்:

**அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்.**

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

(89944)

## நஞ்சூட்டி அழிப்பு

வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் எதிர்வரும் புதன்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்பட உள்ளன. எனவே பொது மக்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-72(

## அ. அட்டைகள் கிடைத்தன

மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் மூலம் கடந்த மே மாதம் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்—

சம்பந்தப்பட்டவர்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அதிபர் செ. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

### யாழ். பல்கலைக்கழக விவகாரம்

# மனித நேய அமைப்புகள் கல்வி அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மூடப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் கல்வி, உயர்கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளதையிட்டு எமது ஆழ்ந்த அதிர்ச்சியையும், மனத்துயரையும் தெரிவிக்கும் முகமாக இம்மகஜரை அனுப்பியுள்ளோம் யாழ்.மக்களாகிய நாம் கல்வியையே எமது முதன்மைச் செல்வமாகக் கணிக்கிறோம்.

பல்கலைக்கழக மாணவரின் எதிர்ப்புத்தெரிவிக்கும் செயற்பாடுகள், விஞ்ஞானபீட மாணவனாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டதையடுத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது யாவரும் அறிந்ததே.

ஆனால் நாட்டின் வேறு பகுதிகளில் பொதுச்சொத்துக்கள் அடித்துடைக்கப்பட்டதன் காரணத்தால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டது போன்றதல்ல யாழ். வளாகம் மூடப்பட்டுள்ள விடயம்.

அண்மைக்காலத்தில் பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டில் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பல இளம் வயதினர் சுற்றவாளிகளென விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தாம் புலி இயக்கத்தினரென்று அவர்கள் எழுத்தில் கொடுத்த வாக்குமூலம், சித்திரவதையின் காரணமாகவே எழுதப்பட்டன என்று நீதிமன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் திவ்வியன் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

மேலும் துணைவேந்தரின் தீர்மானமின்றியே யாழ். வளாகத்தை மூடுவதென்ற முடிவு எடுக்கப்பட்டதாக நாம் அறியவருகிறோம். மாணவரும் இதுபற்றி பத்திரிகைகளிலிருந்தே படித்தறிய நேரிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை பாடசாலைகளுக்கும், யாழ். குடாநாட்டுக்கு வெளியேயும் பரவிவிட்டது. எனவே பாதக விளைவுகள் நீடிப்பதை தடுக்கும் முகமாக திவ்வியனுக்கு உடனடியாக நீதி வழங்க வேண்டுமாறும், பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்கும் படியும் தங்களைப் பணிவுடன் கோருகிறோம்—என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## 10 ம் ஆண்டு நினைவலைகள்

15-07-2001



**நெல்லை க. பேரன்**

குடும்பத்தினர்

மறைவு: 15-07-1991

ஆண்டுகள் பத்து ஆகியதோ?
ஈரவிழி இன்னும் ஆறவில்லை!

தகவல்:
க. பாலேந்திரன்

முருகமூர்த்தி கோயிலடி,
நெல்லியடி,
கரவெட்டி.

(சி/17393)

# உதயன்

## பின்னடைவின் பின்னால்...!

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளரும பல்கலைக்கழக மாணவனுமான திவ்வியன் கைது செய்யப்பட்ட விவகாரம் குடாநாட்டின் வழமையான செயற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்து, இப்போது வடக்குக்கு அப்பால் கிழக்குக்கும் பரவிவிட்டிருக்கின்றது.

ஈழத்து இளம் சமூகம் ஒருபுறமும் அரசுப் படைகளும், அரசுத் தரப்பும், அரசுத் தரப்பு சார்பான தமிழ் அமைப்பும் மறுபுறமும் என்ற ரீதியில் பிரச்சினை இரண்டுபட்டு நிற்கின்றது.

மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது நியாயமானதா? சட்டரீதியானதா? - போன்ற கேள்விகளையெல்லாம் அப்பால் தள்ளிவைத்துவிட்டு ஒரு விடயத்தைப் பார்க்கவேண்டும்.

திவ்வியன் கைதுசெய்யப்பட்ட போது ஆரம்பத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் - தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். பதிலடியாக அரசு பல்கலைக்கழகத்தை மூடியது. அதன் விளைவாக மெல்ல மெல்லப் பகிஷ்கரிப்பு குடாநாட்டுப் பாடசாலைகளுக்குப் பரவியது. பதிலாக அரசு பாடசாலை வாசல்களிலும் சந்திகளிலும் பொலிஸாரைக்கொண்டு போய்க் குவித்தது; தனது ஆயுதபலம் மூலம் மாணவர் போராட்டத்தை அடக்க முற்பட்டது. பேச்சு வாயிலாகப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகள் பலன்தரவில்லை. அரசும் விடாப்பிடியாக நின்றது; மாணவர்களும் அசைந்து கொடுக்கவில்லை.

தொடர்ந்து போராட்டம் ஆசிரிய கலாசாலைகள், தேசிய கல்விக் கல்லூரி என்று வியாபித்தது. அதன் பின்னரும் தீர்வு காணப்படாத நிலையில், வடக்கிலிருந்த போராட்டம் வன்னிக்கும் கிழக்குக்கும் விரிந்து சென்றது. இப்போது வன்னியிலும் கிழக்கிலும் கூட பாடசாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

அத்தோடு, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் மட்டுமல்லாமல் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் ஏனையவற்றை முந்திக் கொண்டு திவ்வியன் கைது விடயத்தில் சூடாக - கொதித்து - எழும்பியிருக்கின்றது.

திவ்வியன் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்துத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை ஐந்நூறுக்கும் அதிக மாணவர்கள் நடத்திய பெரும ஆர்ப்பாட்டத்தின்போது அந்தப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை கவனிக்கத்தக்கது.

"அரச பயங்கரவாதத்திற்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவதற்காக தமிழர்கள் மத்தியில் எஞ்சியிருக்கும் ஒரேயொரு நிறுவனம் பல்கலைக்கழக சமூகமே! எஞ்சியிருக்கும் இவ்வாறான ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் குரல்வளையை நசுக்க முனைவதை எம்மால் ஏற்க முடியாது.

"திவ்வியனை விடுதலை செய்யக் கோருவதன் மூலமும், யாழ்.பல்கலைக்கழகத்தைத் திறக்க வேண்டுவதன் மூலமும் எமது சக சிறுபான்மை இன மாணவர்களுடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம்" - *என்று அந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.*

திவ்வியனைப் பிடித்ததன் மூலம் - அரசு மற்றும் படைத்தரப்பில் கூறப்படுவது உண்மை என்று வைத்துக் கொண்டாலும் கூட - ஒரு 'பயங்கரவாதியை' படையினர் மடக்கியுள்ளனர் என்பது வாஸ்தவம்தான். ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் அடங்கிப்போய் இருந்த எழுச்சியை, ஒற்றுமை உணர்வை பல்கலைக்கழக மட்டத்தில் வேரூன்றச் செய்து, முஸ்லிம் இளைஞர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட ஒலுவில் வளாகம் உட்பட 'தமிழ்பேசும் மக்களின்' அனைத்து இளம் சக்திகளையும் அது ஓரணியில் கொண்டுவரச் செய்துவிட்டிருக்கின்றது என்பதும் உண்மையே.

அதுமட்டுமல்லாமல், இந்தச் சக்திகளுக்கு - எழுச்சிப் போராட்டங்களுக்கு - முழு ஆதரவு கொடுப்பது குறித்து குடாநாட்டு ஆசிரிய சமூகம் சிந்திக்கத் தொடங்கும் அளவுக்கு அது நிலைமையை மாற்றியிருக்கின்றது.

எனவே திவ்வியன் கைது விடயம் தமிழர் கல்விக்கு ஒரு பின்னடைவு என்றாலும், அதற்குப் பின்னாலும் ஒரு நல்ல காரியம் நடந்துதான் உள்ளது.

# உரும்பிராய்ப் பகுதிக் கடைகளில் சுகாதாரக்குழு திடீர் சோதனை

கோப்பாய்,ஜூலை15

உரும்பிராய்ப் பகுதி வாத்தக நிலையங்களில் கடந்தவாரம் பொதுச சுகாதார பரிசோதகர் குழு திடீர்ப் பரிசோதனைகளை மேற் கொண்டது.

இதன்போது இப்பகுதி வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட காலாவதியான பிஸ்கட் வகைகள் செக்கிலேற்றுகள், பால்மா பக்கற்றுகள் மற்றும் பழுதடைந்த உப உணவுப் பொருள்கள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன் இவ்வாறான பொருள்களை விற்பனை செய்தவர்களுக்குப் பல்வேறு அறிவுறுத்தல்களை விடுத்ததுடன் இதுபோன்ற நடவடிக்கைளில் ஈடுபடவேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டது.

நீர்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தயாளன் தலைமையில் சென்ற குழுவே இந் நடவடிக்கையை மேற்கொண்டது.

(ஐ-72)

## சிறுவர் உரிமை கருத்தரங்கு

வடமராட்சி,ஜூலை15

சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை தும்பளையில் உள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(ஐ-173-182)

# நாட்டு நடப்பு

## போதை - VI

கந்தரின் வீடு நண்ணி
கனகி கருவாடு வாட்ட
மொந்தையில் புளித்த கள்ளை
மெதுவாக பிளாவில் ஊற்ற
குந்தியிருந்து மண் மேல்
குடித்திட்ட நாளை எண்ணி
சந்தியாப்பிள்ளை மாஸ்டர்
சலிக்கிறார் கனடா நாட்டில்.

*- விகடகவி -*

# பிறப்புரிமைக்காக ஒரே அணியில் திரள்வோம்!

அவசரகாலச் சட்ட நீடிப்பு -

பிரதம நீதியரசருக்கெதிரான கண்டனப் பிரேரணை -

அரசின் மீது நம்பிக்கைஇல்லாப் பிரேரணை -

போன்றவற்றை மையமாகக் கொண்டு ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பெரும் சக்திகளுக்கிடையே மிகப்பெரும் பலப்பரீட்சைக்காக அரசியற் களம் சூடு பிடித்துக்கொண்டிருந்த வேளையில் -

ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பொதுசன ஐக்கிய முன்னணியும் -

அதை எப்படியும் தனதாக்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் -

திறவாத படலையெல்லாம் திறந்து -

ஏறாத படியெல்லாம் ஏறி -

'இல்லாத' உறுதியெல்லாம் கொடுத்து -

நாடாளுமன்ற உறுப்பினருள் மேலும் சிலரைத் தத்தம் பக்கத்திற்கு 'வளைத்து இழுப்பதைத்' தம் முழுநேரப் 'பணி'யாகச் செய்துகொண்டிருந்த வேளையில் -

அரசாங்கம் 'மண் கவ்வப்'போவது பெரும்பாலும் நிச்சயம் என நம்பப்பட்ட வேளையில் -

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்து 'ஒருவித' வெற்றியை ஈட்டிவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா!

ஆனால் -

அந்த வெற்றிக்காகச் சந்தோஷமாக அவரைப் பாராட்டுபவர்களை விட -

அதை அடைவதற்காக அவர் கையாண்ட 'வழி'க்காக அவரைச் சந்தேகக் கண்ணுடன் நோக்குபவர்களின் தொகை அதிகமாக இருப்பது தான் அவருடைய துரதிர்ஷ்டம்!

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதைப் போலத் தோன்றினாலும் நடைமுறையில், தனி ஒருவரின் சர்வாதிகாரத்துக்கே இவை இட்டுச் செல்லும் -

வசதி படைத்தவர்களையும் மேல் தட்டு வர்க்கத்தினரையும் மேலும் மேலும் உயரச் செய்யும் வேளையில் -

ஏழை எளியவர்களையும் சிறுபான்மை இனத்தினரையும் கீழே போட்டு நசுக்கிவிடும் -

என்றெல்லாம் ஜே.ஆரின் அரசியல் யாப்பின் எந்த அம்சங்களைத் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்தாரோ - எந்தப் பதவியை ஒழித்துக் கட்டப் போவதாக நாளிலும் பொழுதிலும் நாட்டு மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ததுடன் அமையாமல், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்கு எழுத்து மூலம் உறுதியளித்து, போட்டியிலிருந்து அவரை விலகவும் வைத்தாரோ - அதே 'நிறைவேற்று' ஜனாதிபதிப் பதவியில் இரண்டாவது தடவையாகவும் 'சிக்காராக' அமர்ந்து கொண்டு -

அரசியல் யாப்பின் அதே அம்சங்களைப் பயன்படுத்தி -

நாடாளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து -

ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்திருக்கிறார் சந்திரிகா பண்டாரநாயக்கா!

தானும் ஒரு 'சர்வாதிகாரி'தான் என்பதை உலகுக்கு வெளிக்காட்டியும் விட்டார்!

ஜனாதிபதியின் இந்த 'அதிரடி' நடவடிக்கையை, அவருடைய அரசில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் -

1978ஆம் ஆண்டில் ஜே.ஆர்.உருவாக்கிய அரசமைப்பே, நாட்டில் இப்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு மூலகாரணம். அந்த அரசமைப்பைத் தொடர்வதா அல்லது புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதா என்பதை மக்களே தீர்மானிக்கும் வகையிலே 'சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு வசதியாகவே நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளதாக -

தன் 'திடீர்' நடவடிக்கைக்கு நியாயம் 'கற்பிக்கின்றார்' ஜனாதிபதி!

முதற்றடவையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபோது -

"மக்கள் எனக்கு வழங்கிய தெளிவான ஆணையின்படி அரசியல் யாப்பை மாற்றுவேன்; நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை நீக்குவேன்; இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பேன்" - எனச்சொன்ன ஜனாதிபதி, தன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாகக் 'காட்டி'க் கொண்டே தன் பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்தார்!

இரண்டாவது தடவையாகப் போட்டியிட்டு வென்றபோதும் -

முன்னர்சொன்னவற்றையே மீண்டும் சொன்னார்; முன்னர் செய்தவற்றையே மீண்டும் செய்தார்.

இப்பொழுது -

அதே நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப்போகின்றாவாம்!

மக்கள் தெளிவான ஆணையை வழங்கினாலும் -

அவை அனைத்தையும் அவர் விசுவாசமாக நிறைவேற்றி வைப்பார் என்பதற்கு அவருடைய கடந்தகால 'வரலாறு' எவ்வகையிலும் உத்தரவாதம் அளிப்பதாக இல்லை!

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்!

ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், அரசில் இருந்து வெளியேறியதே ஆட்சி ஆட்டம்கண்டிருப்பதற்கான உடனடிக் காரணம்!

ஆகவே -

சிறுபான்மை இனக் கட்சியினரின் உதவி இன்றியே ஆட்சி அமைக்கக் கூடிய விதத்தில் தேர்தல் முறைகளிலே மாற்றம் கொண்டுவருவதில் இரு பெரும் கட்சிகளும் இணையக்கூடும் - இணையும்!

இந்த நிலையில் -

தமிழ் - முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் -

தமக்கிடையேயுள்ள 'சில்லறை' வேறுபாடுகளை மறந்து -

நாட்டின் நன்மையுடன், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய 'தமிழ் பேசும் மக்களின்' நன்மையையும் இணைத்து -

பேரினவாதத்தைப் புறங்கண்டு -

சிறுபான்மை இனங்களுக்குரிய பிறப்புரிமைகள் - சிறப்புரிமைகள் அனைத்தையும் வென்றெடுத்துச் சுதந்திரமாகவும் தன்மானத்துடனும் வாழ்வதற்காக ஒரே அணியிலே திரளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்!

*- சித்தன்.*

## கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சத்துணவு வழங்குவதற்கான மாணவர் பட்டியல் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட பட்டியலைக்கொண்டு இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-16)

## நாளை

ஆனி 32
திங்கட்கிழமை
திதி: தசமி
முற்பகல் 9.26 வரை.
நட்சத்திரம் : கார்த்திகை
பின்இரவு 4.15 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம்-: 10.30 - 12.00
ராகுகாலம் : 7.30 - 9.00
(பழைய நேரப்படி)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

ஊர்காவற்றுறை,ஜூலை15

ஊர்காவற்றுறையில் அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி நாளை திங்கட்கிழமை முதல் இரண்டு தினங்களுக்குத் தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், பல நோ.கூ. சங்கங்கள் தமது அளவைகள், நிறுவைகள் அளக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-16)

## உதயவாக்கு

நெஞ்சிலே குற்றமுள்ளவர்கள் ஒவ்வொரு கண்ணும் தங்களையே பார்ப்பதாக எண்ணுவர்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



நீங்கள் கண்ட பொருளைப்பற்றி மற்றவர்களுக்கும் கூறி அவர்களை எச்சரியுங்கள். அத்துடன் கிராமசேவையாளர் அல்லது வேறு உரிய அதிகாரிகளுக்கு அதுபற்றி அறிவியுங்கள்.

# கலாசார உத்தியோகத்தருக்கு திருமலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை15

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலாசார செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், திட்டமிடல், தாபனவிதிமுறைகள், நிதிப்பிரமாண நடைமுறைகள் குறித்துக் கலாசார உத்தியோகத்தர்களுக்கு விளக்கம் அளிக்கப்படும் என பண்பாட்டலுவல்கள் உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அறிவிததுள்ளார்.

மேற்படி கருத்தரங்கில் கலந்துகொள்ளச் செல்லும் யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் தமது பிரயாண ஒழுங்குகளை மாவட்டச் செயலகத்துடன் தொடர்புகொண்டு செய்து கொள்ளலாம் எனவும் எஸ்.எதிர்மன்னசிங்கம் தெரிவித்துள்ளார் (ஐ-7)

## கண்ணாடி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை15

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை நடத்தும் இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிறு காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ-4)


## அறிவித்தல்

தயவு செய்து கவனிக்கவும் ஜப்பானைச் சேர்ந்த Nippon Antenna Company, Nippon America Boosterகளைத் தயாரிப்பதில்லை.

KOBE Antenna Boosterகளைத் தயாரிக்கும் SHOWA Company Limited ம் நிப்போன்அமெரிக்கா பூஸ்டர்களைத் தயாரிப்பதில்லை.

**KOBE Booster பெட்டிகளில் வரும் இந்தப் போலி பூஸ்டர்களுக்கு நாம் எந்த பொறுப்பையும் ஏற்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

3 வருட உத்தரவாதம் (ட்ரான்ஸ்போமரைத் தவிர்த்து)

அசல் முதல் தர விற்பனைச் சாதனை கொண்ட

**கோபே அன்டெனா பூஸ்டர்**

என்று கேட்டு வாங்குங்கள்

**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 08 - 1926



உதிர்வு 15 - 06 - 2001

### திருமதி முத்துப்பிள்ளை தில்லைநாதர்

**எம் குடும்ப விளக்கே அம்மா!**
**நோயில் அழுந்தி நொந்து மனம் வாடாமல்**
**மின்னலென நீர் மறைந்து மீளாத்துயர் எமக்குத் தந்தீரே!**
**"ஓ" வென்று நாமலற ஓடி மறைந்தீரே நம் கண்முன்!**
**விம்மி வெடிக்கும் எம் வேதனை புரியவில்லையோ?**
**விடைபெறாமல் சென்றதுதான் சரியோ?**
**மாளாது நம்துயர் நம்முயிர் மாளுமட்டும்!**
*என்றும் உங்கள் நினைவுடன்*
*ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்தி வழிபாடும் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.*

(90046)

# குடாநாட்டில் நிலுவைகளைச் செலுத்தாத 8 ஆயிரம் பாவனையாளர்களின் மின் இணைப்பு துண்டிக்கப்படும்!

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.மாவட்டத்தில் உள்ள மின் பாவனையாளர்களில் 8ஆயிரத்து 300 பேருக்கான மின் பாவனை துண்டிக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாக இவர்கள் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் மின் கட்டணத்தைச் செலுத்தாது இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இவர்களுக்கான மின்சார விநியோகத்தை நிறுத்த இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுததுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 43 ஆயிரம் மின் பாவனையாளர்கள் உள்ளனர். இவர்களில் தொடர்ச்சியாக நிலுவைகளை வைத்திருக்கும் 8 ஆயிரத்து 300 பேருக்கு மாத்திரம் இன்னும் பத்துநாள்களுக்குள் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

மின்பாவனையாளர்கள் தமது நிலுவையை உரிய காலத்தில் செலுத்தி மின்பாவனையை உறுதிப்படுத்த வேண்டும் என இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-173)

## தேர்வு விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.சைவ பரிபாலன சபையினால் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ள சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேர்வுக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்று 15ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டுப் பாடசாலைகள் தற்போது இயங்காதிருப்பதால் மாணவர்களின் விவரங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.(க-7)

## யாருடைய அ.அட்டைகள்?

பெரியபளை, பளையைச் சேர்ந்த பரஞ்சோதி பத்மரூபி (இல.787423140V) வண்ணாங்கேணி, பளையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் தேவிகா (இல. 807551205V) ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் நல்லூர் கைலாயபிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் -

உரியவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியும் -

மேற்படி ஆலயக் குருக்கள் கேட்டுள்ளார். (க-3)

## லயன்ஸ் கழக பதவியேற்பு வைபவம்

மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவிருக்கும் யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் லயன் எஸ். ரவீந்திரனின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்குப் பிரதம விருந்தினராக பிராந்திய இணைப்பாளர் லயன் சிபத்மநாதனும், கௌரவ விருந்தினராக லயன் செ.ஞானராசாவும் கலந்துகொள்வார்கள். (ஐ-100)

## நினைவு தின நிகழ்வுகள்

இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த பழனி, பாபு ஆகிய இரு இளைஞர்களின் 12ஆவது நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை ஐக்கிய தீப சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மேற்படி நினைவு தினத்தை முன்னிட்டு நெடுந்தீவுப் பகுதி மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் அன்றைய தினம் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர் க.அறிவரசன் அறிவித்துள்ளார். (ஐ-7)


### கோயில் கட்டட நிர்மாண வேலைகள்

கோயில் கட்டட நிர்மாண வேலை, சிற்பஅமைப்பு, வர்ணப் பூச்சு வேலைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

**ஸ்தபத் தி.வீரசிங்கம்**
*76, ஆத்திகுடி வீதி, கந்தர்மடம்.* (90003)


# உளவளத்துணை பயிற்சிநெறி சாந்திகத்தில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் அனுசரணையுடன் 'சாந்திகம்' நடத்தவுள்ள குறுங்கால உளவளத்துணையாளர் பயிற்சி நெறி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 'சாந்திகம்' நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றியோரில் 24 பேர் இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

சாந்திகத்திலும், தெல்லிப்பழை, மந்திகை வைத்தியசாலையிலும் உள்ள உள நலப்பிரிவுகளில் நோயாளர்களைச் சந்தித்து ஆற்றுப்படுத்தும் சேவையில் இப்பயிற்சியாளர்கள் ஈடுபடுவர். இது சாந்திகத்தின் ஏழாவது பயிற்சி அணி ஆகும்.

சாந்திக உளவளத் துணையாளர்களான சி.விஜயரட்ணம், திருமதி ஷிரோமி லெனாட் ஆகியோர் இப்பயிற்சி நெறிக்கான இணைப்பாளர்களாகப் பணியாற்றுவர். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

### முத்துராஜா ஜெயரட்ணம்

அவர்கள் கடந்த 06-07-2001 அன்று காலமானதையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
*யாழ்.மத்திய கல்லூரி*

(90088)

உ

### கோண்டாவில் கிழக்கு அருள் தரு கேணியடி காளி அம்பாள் விஷு வருஷ பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

| | | | |
|---|---|---|---|
| 15-07-2001 | ஞாயிறு | கொடியேற்றம் | பகல் 10 மணி |
| 21-07-2001 | சனி | வேட்டைத்திருவிழா | மாலை 4 மணி |
| 22-07-2001 | ஞாயிறு | சப்பறத்திருவிழா | மாலை 6 மணி |
| 23-07-2001 | திங்கள் | தேர்த்திருவிழா | பகல் 10 மணி |
| 24-07-2001 | செவ்வாய் | தீர்த்தத்திருவிழா | பகல் 10 மணி |

அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து அருள் பெறுக!

ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ சி.ஹரிஹரசுத சர்மா

மகோற்சவ பிரதம குரு
பிரம்மஸ்ரீ நா.அருணோதயக் குருக்கள் *(புங்குடுதீவு)*

**- ஆலய பிரதம குருவும் பரிபாலன சபையும்.**

(89880)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 01 - 02 - 1938



இறப்பு 19 - 06 - 2001

### அமரர் பொன்.சபாபதி

(கிளிநொச்சி மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளரும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வன்னி இணைப்பாளரும்)

**எங்கள் கிராமத்தின் உதய சூரியன்**
**பொங்கும் இதயத்தின் புனித காவலன்**
**எருதிடல் கிராமத்தை எழுச்சி செய்தவன்**
**நவபுரம் என்றதன் நாமம் வைத்தவன்**

**பொன்னை தன்பெயரில் மட்டுமே கண்டவன்**
**தன்னை சேவைக்கே செலவு செய்தவன்**
**சொன்ன சொல்லை செயலால் முடித்தவன்**
**அன்னை தமிழ் முடிசூடத் துடித்தவன்**

**இயற்கையின் கொடுமை இவனையும் விட்டதா?**
**செயற்கையில் இவனை மீளவும் கிட்டுமா?**
**துயர்க் கொடுமை எமை யெலாம் வாட்டுதே.**
**இயற்கையே இவையெல்லாம் எமக்கு மட்டுமா?**

*நவபுரம், கைதடி.*

**நவ சனசமூக நிலையமும் எருதிடல் அ.த.க.பாடசாலைச் சமூகமும்.**

(90086)

# மசிடோனிய நாட்டு நிலைமை ஸ்ரீலங்காவிலும் ஏற்படுமாம்!

## அரசியல்வாதிகளை எச்சரிக்கிறார் சிங்களவார இதழ் கட்டுரையாளர்

**8.7.2001ஆம் திகதிய 'ஞாயிறு திவயின' பத்திரிகையில் கீர்த்தி வர்ணகுல சூரிய என்பவர் வரைந்த கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

"முடிவற்ற போராட்டங்கள் காரணமாக மனித சமூகம் மென்மேலும் வலுப்பெறுகிறது; இருப்பினும் தொடர்ச்சியான சமாதானத்தால் அந்த மனித சமூகம் அழிந்து போகிறது." **(MANKIND HAS GROWN STRONG IN ETERNAL STRUGGLES AND IT WILL ONLY PERISH THROUGH ETERNAL PEACE)**

இரண்டாவது உலக யுத்தத்தை ஆரம்பித்த ஜெர்மனியின் சர்வதிகாரி அடோல்ப் ஹிட்லர் தான் எழுதிய "மெயின் காம்ப்" என்னும் நூலின் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வேலுப்பிள்ளை பிரபாகரனும் ஹிட்லரின் கொள்கையையே பின்பற்றுகிறார். சர்வதேச சமூகத்தையும் இந்நாட்டு அரசியல்வாதிகளையும் ஏமாற்றுவதற்காக நோர்வேக்காரர்களை அழைத்துவந்து போலிச் சமாதானத்தைப் பிரகடனப்படுத்திய அவர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தைத் தயாரித்திருந்தார். எங்கள் ஆள்களும் கண்ணுக்குத் தெரியாத அந்தச் சமாதானத்தின் மீது நம்பிக்கை வைத்தனர். எமது அரசியல்வாதிகளில் சிலர் புலிகள் மீதான தடைநீக்கப்படவேண்டும் எனக் கூறும் அளவிற்கு பிரபாகரனுக்கு மிகவும் பயந்து, பலவீனம் அடைந்துள்ளனர். சமாதானப் பேச்சுக்கள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் பூநகரியில் பெருமெடுப்பில் போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டுவருவதாக வடபகுதியில் இருந்து எமக்குக் கிடைக்கும் நம்பிக்கையான தகவல்கள் முதலில் தெரிவித்தன. இந்தப் பயிற்சிகளின் போது சிப்பாய்களின் உருவப் பொம்மைகளைக் கூடப் பயன்படுத்தினராம். பூநகரிக்கும் குடாநாட்டிற்கும் இடையே 4 கி.மீ. தூரமே உள்ளது. எனவே இந்தத்தூரத்தை கடல் வழியாகக் கடந்து - குடாநாட்டில் கரையேறித் தாக்குதல்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் திட்டமிட்டிருந்தார். இதைவிட தொண்டமனாறு கடல் நீரேரி ஊடாக மற்றுமொரு தாக்குதல் அணியை அனுப்பத் திட்டமிடப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது. விடுதலைப் புலிகளின் இந்தத்திட்டங்கள் குறித்து கடந்த மாதம் 27ஆம் திகதி நாம் தெரிவித்த போதும் வடபகுதிப் பாதுகாப்புப் படையினர் அதுகுறித்து அக்கறை கொள்ளவில்லை. இதற்கிடையில் யாழ்.குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் மற்றும் பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள் நிலைகொண்டுள்ள இடங்கள் ஆகியவற்றை குடாநாட்டிற்குள் அனுப்பி வைக்கப்பட்ட புலிகளின் உளவாளிகள் செய்மதிப் படங்களாக்கியுள்ளனர். லண்டனிலுள்ள வர்த்தக ரீதியில் செய்மதிப் படங்களை எடுக்கும் நிறுவனத்தின் மூலம் உலகில் எப்பகுதியிலுள்ள இடத்தையும் செய்மதிப் படமாக்க முடியும். இந்நாட்டுப் பாதுகாப்புப் படையினரும் ரஷ்ய நிறுவனத்தின் மூலம் செய்மதிப் படங்களைப் பெறக் கூடியதாய் இருந்தும் அவர்கள் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவில்லை. ரஷ்ய அரசு மிகவும் மோசமான பொருளாதார நிலைமையை எதிர்நோக்குவதால் அவர்களது 'KUR - 1000', 'K.F.A 3000', 'M.K 4', 'KATE - 2000', 'T.K. 350' என்னும் செய்மதி மூலம் படமெடுக்கும் உபகரணங்களில் இரகசியத் தன்மை எவையும் இல்லை. எவர் விரும்பினும் அவருக்கு விற்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த உபகரணத்தின் மூலம் நிலத்தில் இருந்து 2 மீற்றர் வரையுள்ள எந்தப் பொருளையும் மிகவும் தெளிவாகப் படம் எடுக்க முடியும். அதேபோலவே எந்தவொரு பிரதேசத்தின் அமைப்பையும் அங்குள்ளவற்றையும் மிகவும் தெளிவாகவும் விரிவாகவும் இந்த உபகரணத்தின் மூலம் படமாக்கமுடியும். இருப்பினும் வடபகுதியில் உள்ள படைஅதிகாரிகள் 'தட்டில் வைத்துப் பலகாரத்தை வழங்குவது போல்' பல்குழல் றொக்கட் லோஞ்சர்களை போர்த்தாமலும் மறைக்காமலும் பல இடங்களில் நிலை நிறுத்திவைத்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் செய்மதிப் படங்களை எடுக்கிறார்கள் என ஏன் பாதுகாப்புப் படையினர் நினைக்கவில்லை?. 'இகொ நொஸ்' **(IKO NOS)** செய்மதிப்பட நிறுவனத்தினால் நிலத்திலிருந்து ஒரு மீற்றர் உயரம் வரையில் செய்மதிப்படங்கள் எடுக்க முடியும் போது பூநகரியில் இடம் பெறும் சம்பவங்கள் (பயிற்சிகள் ஒத்திகைகள்) குறித்து உரிய அவதானிப்புகள் மேற்கொள்ளப்படாதது ஏன்?.

### இடமாற்றம் ஏன்?

"அக்கினிச் சுவாலை" என்ற பெயரில் தோல்வியில் முடிவடைந்த இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரிகள் தொண்டர் படைப் பிரிவின் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டு அங்கு பணியாற்றிய மற்றொரு அதிகாரி வடக்குக்கு மாற்றப் பட்டுள்ளார். இது 'குதிரை தப்பிய பின்னர் ஆயத்தைப் பூட்டிவைப்பதற்குச் சமமானதாகும்'

இந்த இடமாற்றங்கள் இடம் பெறுவதற்கு முன்னர் வடக்கில் பல்குழல் றொக்கட் லோஞ்சர்களைச் செயற்படுத்தும் அதிகாரிகளுக்கு கட்டளை ஒன்றுகிடைத்தது. தன்னுடைய அனுமதியின்றி அந்த உபகரணங்களை இயக்கவேண்டாம் என இடமாற்றம்பெற்றுச் சென்ற இராணுவ அதிகாரி அந்தக் கட்டளையில் தெரிவித்திருந்தார் எனத் தேசிய பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை கிடைத்துள்ளது. பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள் 'கிறாட் றொக்கட்' பகுதிகளுக்குள் **(AREA WEAPON)** சென்று வீழ்வதால் அதைப்பயன்படுத்த வேண்டாம் என அந்த அதிகாரியின் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் வருகையைத் தடுப்பதற்கு 'கிறாட் றொக்கட்' மிகவும் பொருத்தமானது எனச் சிபார்சு செய்யப்பட்ட போதிலும் அப்போதிருந்த பிரிகேடியர் ஒருவர் அவை தேவையற்றவை எனத் தெரிவித்ததால் அவற்றைப் பெறும் முயற்சிகள் கைவிடப்பட்டன.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் வான் தாக்குதல்கள் நிறுத்தப் படவேண்டும் என விடுதலைப் புலிகள் தெரிவித்ததால் தற்காலிகமாக வான் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன. இருப்பினும் நிலைமைகளில் தீவிரம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வான் தாக்குதல்கள் மீண்டும் நடத்தப்பட்டன.

யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும் பிரபாகரனின் திட்டத்தை முறியடிப்பதற்கு விமானப் படையால் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

### செச்சினிய யுத்தம்

ரஷ்ய விமானப் படையினர் செச்சினியப் பயங்கரவாதிகளை அழிப்பதற்கு 'பியுவல்' விமானக் குண்டுகளையும் **(FUEL AIR BOMBS)** 'எரோசொல் எக்ஸ்புளோசிவ் குண்டு' **(AEROSOL EXPLOSIVE BUMBS)** என்னும் விசேடரக குண்டுகளையும் பயன்படுத்தினர். இதனால் 'பங்கர்'களுக்குள் இருந்த ஆயிரக்கணக்கான செச்சினியப் பயங்கரவாதிகள் பலியானார்கள். இந்தக் குண்டுகளில் உள்ள விசேடதன்மை என்ன வெனில 'காஸ்' **(GASS)** வாயு அப்பிரதேசம் எங்கும் பரவி வெடிக்கும் அதே போல தருப்பு எதிர்ப்பு **(ANTI PERSONAL)** டாங்கி எதிர்ப்பு **(ANTI - TANK)** கண்ணிகள் விதைக்கப்பட்டுள்ள பகுதிகளை அழிப்பதுடன் மூடிமறைத்து வைக்கப்படும் யுத்த உபகரணங்களுக்கும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும்.

இந்த விசேட குண்டுகளை எமது விமானப்படை இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. நான்கு வகையான தாக்குதல்கள் மூலமே செச்சினியப் பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில ரஷ்யப்படை வெற்றிபெற்றது. கிறாட் றொக்கட் தாக்குதல்முறை, ஏவுகணைத் தாக்குதல்முறை "பியுவல்" விமானக் குண்டுத் தாக்குதல்முறை, 'எரோயல் எக்ஸ் புளோசிவ' குண்டுத் தாக்குதல்முறை என்பனவே அவையாகும். இந்த 'எரோயல்' மற்றும் 'பியுவல்' குண்டுகள் ஒவ்வொன்றும் 500 கிலோவுக்கு மேற்பட்ட நிறையுடையவை.

மணிக்கு 500 கி.மீ. வேகத்தில் செல்லும் சாதாரண தாக்குதல் விமானங்களால் கூட இந்தக் குண்டுகளை எடுத்துச் சென்று வீச முடியும. செச்சினியாவில் 'கொங்கிறீட்'டால் அமைக்கப் பட்டிருந்த 'பங்கர்கள்' கூட இந்த பியுவல் குண்டுகளால் அழிக்கப்பட்டன. இந்திய விமானப் படை 'கார்கில்' யுத்தத்தின் போது மலைப்பகுதிகளில் பதுங்கியிருந்த காஷ்மீர் தீவிரவாதிகளை அழிப்பதற்கு இவ்வாறான குண்டுகளைப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

சிறிலங்கா விமானப்படை 'எரோயல்' குண்டுகளை பெற்றிருக்குமாயின் பூநகரியில் புலிகளின் முகாம்கள் மற்றும் "பங்கர்கள்" இருக்கின்றனவா எனத் தேடவேண்டிய தேவையே ஏற்படாது.

இதற்கிடையில் தமக்கு எதிராக விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் புலிகளின் தலைமை கொழும்பில் 'தமிழ் நெற்' என்னும் இணையத்தளத்தை நடத்திவரும் முன்னாள் பயங்கரவாதியை அணுகித் தங்களது அறிவிப்பை வெளியிட்டனர். இவ்வாறு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டால் சமாதான முயற்சிகள் பெரிதும் பாதிப்படையும் எனவும் அதன் பின்விளைவுகளை அரசு எதிர்நோக்கவேண்டிவரும் எனவும் புலிகள் தங்கள் அறிவிப்பில் தெரிவித்திருந்தனர். விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு தடைசெய்த வேளையிலும் சிறிலங்கா அரசு எதிர்விளைவுகளைச் சந்திக்கநேரிடும் எனப் புலிகள் எச்சரித்திருந்தனர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் திட்டம் எதுவும் தற்போதில்லை எனப் புலிகள் தெரிவித்தாலும் அவ்வாறான திட்டம் உள்ளது என்பதையே இது உறுதிப்படுத்துகிறது இல்லையா?

ஜூலை மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அவதானிக்கும் போது அந்த மாதத்தில் புலிகள் பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. 1983 ஜூலை மாதத்தில் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலை புலிகள் நினைவு கூருகிறார்கள். இம்மாதத்தில் (ஜூலை) தமது அமைப்பு மீதான தடை நீக்கப்படும் என அதன தலைவர் எதிர்பார்க்கிறார்.

**தமிழில்: கஜனி**

மட்டக்களப்பில் பாடசாலை பொன்றின் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்வாதி ஜூலை 6ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம்பெற்ற தினமாக அமையும் எனவும் அன்றைய தினம் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்படும் எனவும் தெரிவித்தார். இந்த அரசியல் வாதி ஆஸ்திரேலியாவில் புலிகளின் கலந்துரையாடலில் கூடக் கலந்துகொண்டுள்ளார். இவ்வாறான தகவல்கள் வெளிவந்த வேளையில் அரசு விழிப்படையும் என எதிர்பார்த்தனர். அவ்வாறே 'தமிழ் நெற்' இணையத் தளத்தின் மூலம் ஆஸ்திரேலியாவுக்கான சிறிலங்கா உயர்ஸ்தானிகர்களுக்கு எதிராகப் பிரச்சாரங்களை மேற்கொண்டனர். ஆசிய மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த ரிம் கில் **(TIM GILL)** என்பவரை அணுகி அறிக்கை வெளியிடும் முயற்சிகளை 'தமிழ் நெற்' அமைப்பை நடத்திவரும் முன்னாள் பயங்கரவாதி மேற்கொண்டார். புலிகள் குண்டுகளை வெடிக்கவைத்து அப்பாவிகளான- நிராயுதபாணிகளான - பணிமனை ஊழியர்களின் உயிர்களைப் பறித்தபோது இந்த ரிம் கில் என்பவர் எங்கேயிருந்தார்?

இதற்கிடையில் சித்திரவதைகளைக் கண்டித்து திருகோணமலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா. ஆணையாளர் பணியகத்தைச் சேர்ந்த வெளிக்கள அதிகாரியான நெயின்.கே கிறாமர் என்பவரும் மனிதஉரிமை செயற்பாட்டாளரான கே.சிவபாலன் என்பவரும் உட்படப் பலர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் மீளப் பெறப்படும் வரை சித்திரவதைகள் தொடர்ந்தவண்ணமே இருக்கும் என சிவபாலன் கருத்து வெளியிட்டிருந்தார். இந்தச் சட்டத்தின் அடிப்படையிலா சிறைப் பிடிக்கப்பட்டுள்ள கைதிகளை பிரபாகரன் சித்திரவதைகளுக்கு உள்ளாக்குகிறார்? இராணுவத்திற்குத் தகவல்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு முல்லை முனைச் சந்திக்கு அழைத்துவரப் பட்டு மரத்தில் கட்டிவைத்துத் தாறுமாறாகத் தாக்கிய பின்னர் தலைக்கு வெடிவைத்துக் கொல்லப்பட்ட தர்மன் சிவந்தன் மற்றும் கந்தசாமி தயாரத்னம் ஆகிய இளைஞர்கள் தொடர்பாக இந்த மனித உரிமை அமைப்புகள் மௌனம் சாதித்தன. இந்த இளைஞர்கள் செய்த ஒரேயொரு தவறு அவர்கள் புலிகள் அமைப்பை விமர்சித்தது மட்டுமே. பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை மீளப்பெற வேண்டும் என சிவபாலன் கோருவது யாரின் நன்மைக்காக? இந்திய அரசு தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை **(TADA)** நடை முறைப்படுத்தும்போது - பிரபாகரன் தொடர்ந்தும் படுகொலைகளை மேற்கொள்ளும் போது - நாங்கள் பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை மீளப்பெற வேண்டுமா?

மன்னார் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்துக்குச் சென்று திரும்பி வரும் வேளையில் பொலீஸ் அதிகாரி ஒருவர் இவ்வாறே புலிகளின் துப்பாக்கி வேட்டுக்கு இரையானார். புலிகளின் அடுத்த இலக்கு நிலாவெளியிலுள்ள கடற்படைத் தளத்தின் கட்டளை அதிகாரியே ஆவார். கடற்படையினரால் கடலில் கைது செய்யப் பட்ட சந்தேகநபர் ஒருவர் காணமற் போனதே கடற்படை அதிகாரி மீதான குற்றமாகும். தனதுபாதுகாப்புக் கருதி அந்த வழக்கை கொழும்பு நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றும்படி கடற்படைக் கட்டளை அதிகாரி விடுத்த கோரிக்கையை சந்தேகநபரின் மனைவி எதிர்த்துள்ளார். அந்த வழக்கு திருகோணமலையிலேயே விசாரிக்கப்பட வேண்டும் என அங்குள்ள புலிகளின் ஆதரவாளர்கள் தற்போது பிரசாரங்களை மேற்கொண்டு வருவதுடன் 'தமிழ் நெற்' இணையத் தளம் இதற்கு முதலிடம் அளித்துள்ளது.

இவ்வாறு தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவோர் மற்றும் புலிகளைக் கைதுசெய்யும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை இனங்கண்டு அவர்களைப் படுகொலை செய்யுமாறு புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது 'பிஸ்டல் குழுவினருக்கு' கட்டளை பிறப்பித்துள்ளார்.

### கண்டனங்கள்

இதற்கிடையில் அண்மையில் விமானப்படையினர் மேற்கொண்ட வான் தாக்குதல்கள் காரணமாக பூநகரியில் அமைந்திருந்த புலிகளின் அவதானிப்பு நிலையம் அழிக்கப்பட்டது. நாகர்கோயிலில் அமைக்கப்பட்ட புலிகளின் நடவடிக்கைக்கான விநியோக நிலையத்திற்கு பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இந்தச் சேதங்கள் குறித்து புலிகள் எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை. வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் சீக்கிய, அசாமிய, நாகலாந்து தீவிரவாதிகளுக்கு எதிராகப் போரிடும் இந்திய அரசின் மனத்தை உறுத்தியுள்ளது. வட ஈராக் மீது அடிக்கடி விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளும் அமெரிக்காவின் மனதையும் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் சம்பவம் பாதித்துள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள புலிகளின் நிலைகள் மீது குண்டுகளை வீசுவது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் கவலை தெரிவித்துள்ளது. இந்திய அரசும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது அமெரிக்கா தொடர்பான பிரச்சினை என கொழும்பிலுள்ள அமெரிக்க நாட்டுத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் கருதுகிறாரா? இஸ்ரேல் நாடு தனது பாதுகாப்புக்கெனக் கூறிக் கொண்டு லெபனான் நாட்டின் மீது அடிக்கடி தாக்குதல்கள் மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் இவற்றிற்கெல்லாம் குரலெழுப்புவது இல்லை. சீக்கிய அரசு அல்லது காலிஸ்தான் **(KHALISTAN)** நிறுவப்படும் என அண்மையில் புதுடில்லி வந்த சீக் தலைவர் ஒருவர் குறிப் பிட்டிருந்தார். ஆனால் இந்த நாட்டில் பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும நடவடிக்கைகளில் தலையிட இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் என்ன உரிமைகள் உள்ளன? இந்த இரு நாடுகளும் இரு வேறு கொள்கைகளைப் பின்பற்றுகின்றன. புலிகள் தாக்குதல்களுக்கான தயார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இந்தியர்கள் சமாதானம் குறித்துப் பேசுகிறார்கள். தங்கள் நாட்டுத் தலைவர்களில் ஒருவரான ராஜீவ்காந்தியை கொல்ல புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும் வாஜ்பாய் அரசு வெட்கமின்றி பயங்கரவாதிகளுக்காக் குரலெழுப்புகிறது.

இவ்வாறான சூழ்நிலைகளின் மத்தியில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் யுத்தத்தில் எங்கள் இராணுவம் வெற்றி பெறுமா? அல்லது பிரபாகரன் வெற்றி பெறுவாரா என்ற பாரதூரமான கேள்வி எழுகின்றது. தங்கள் சொந்த லாபங்களுக்காகப் பயங்கரவாதிகளை முக்கிய எதிரிகளாக அரசியல் வாதிகள் கருதாத காரணத்தால் எதிர்காலத்தில் சிறிலங்கா மற்றுமொரு மசிடோனியாவாக மாறவுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இந்நாட்டின் தேசிய பாதுகாப்பில் தீவிரமாகத் தலையிட்டு தான் விரும்பியவாறே செயற்படுகிறது. இந்த ஐரோப்பிய ஒன்றியம் எமது நாட்டு அரசியல் தலைவர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

அல்பேனிய பயங்கரவாதிகளை அழிப்பதற்கு மசிடோனியாவின் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சரும் ஒன்றிணைந்து செயற்பட்ட வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத் தொடர்பு அதிகாரியான வேயாஸ்லோனா தலையிட்டதால் அந்தப் பயங்கரவாதிகள் பாதுகாப்புடன் வெளியேற்றப்பட்டனர். பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த அந்த அரசியல்வாதிகளை (பிரதமரும் வெளிநாட்டு அமைச்சரும்) விமர்சித்த வேயர் ஸ்லோனா, "தனது ஆதிபத்தியத்தின் கீழ் அங்கு நிரந்தரமாக ஒருவரை நிறுத்தவுள்ளதாகத்" தெரிவித்தார்.

வேயர் ஸ்லோனாவின் ஆதிபத்தியம் சிறிலங்கா வரை வியாபிக்கவுள்ள வேளையில் இந்நாட்டு அரசியல்வாதிகள் நோக்கின்றிச் செயற்படுகின்றனர். அவ்வாறான ஒரு நிலை உருவாகும்போது அவர்களால் குரலெழுப்பமுடியாத நிலை உருவாகும். இவ்வாறான பயங்கரமான விபத்துக் குறித்து இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தால் நிர்வகிக்கப்பட்டுவரும் மசிடோனியாவின் நிலைமைகள் மிகவும் கவலையளிப்பனவாக உள்ளன. இன்று அவர்கள் யுத்த உபகரணங்களைப் பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. சிறிலங்காவிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது வரும் அண்மையில் இந்நாட்டின் உள்விவகாரம் தொடர்பாக செய்தியூடகங்களுக்குத் தகவல்கள் வழங்குவதற்குத் தயாராகி வருகிறார்.

### பிரபாகரனின் திட்டம்

பிரபாகரன் எதிர்காலம் குறித்து நன்கறிவார். எனவேதான் 2005 ஆம் ஆண்டில் ஈழ இராச்சியத்தை அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தயார்செய்து வருகிறார்.

இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள், செய்தியூடகங்கள் மற்றும் இலத்திரனியல் செய்தியூடகங்கள் ஊடாக ஒருவர் மீது ஒருவர் பகைத்துக்கொண்டிருக்கும் போது புலிகளுகாகக் குரலெழுப்பும் ரெலோ மற்றும் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய தமிழ்க்

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமறைக் கலாமன்ற கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை15

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றக் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'புலம் பெயர்வுச் சூழலில் தமிழர்கள்' என்னும் தலைப்பில் அருட்கலாநிதி அ.ஜெயசேகரம் அடிகளார் உரை நிகழ்த்தவுள்ளார். (ஐ-4)

## யாழ்.வலய மட்ட சித்திரக் கண்காட்சி போட்டி முடிவுகள்

யாழ்.கல்வி வலயத்தின் பாடசாலை மாணவர்களுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற வலயமட்ட சித்திரக் கண்காட்சிப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களையும்பெற்ற மாணவர்களின் பெயா விவரங்கள் வருமாறு:-

*ஆரம்ப மேற்பிரிவு (தரம் 4,5)*

✪ முதலாமிடம் - பா.அங்குசன் (அச்சுவேலி மத்திய கல்லூரி)

✪ இரண்டாமிடம் - அ.ஜெறோம் (கொழும்புத்துறை இ.ம.வி.)

✪ மூன்றாமிடம் - பி.நந்திகரன் (யாழ். புனித பொஸ்கோ வித்தி.)

*கனிஸ்ட பிரிவு (தரம் 6,7,8)*

✪ முதலாமிடம் ஆரஜீவ் (கோணடாவில் பரம்சோதி வித்தி.)

✪ இரண்டாமிடம் - இ.தர்மிகா (யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் ம.வி.)

✪ மூன்றாமிடம் - க.பூர்ணிமா (வேம்படி மகளிர் கல்லூரி)

*சிரேஷ்ட பிரிவு(தரம் 9,10,11)*

✪ முதலாமிடம்-சு.விஜயபாலன் (யாழ்.மத்தியகல்லூரி)

✪ இரண்டாமிடம் - து.டினேஸ் காந்த் (ஸ்ரான்லிக் கல்லூரி)

✪ மூன்றாமிடம் சு.அகிலன் (யாழ். இந்துக்கல்லூரி), வே.சுஜீவன் - (யாழ்.இந்துக் கல்லூரி)

*சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு தரம்12,13)*

✪ முதலாமிடம் எஸ்ஜே. ஸ்ராலின (சென் பற்றிக்ஸ் கல்லூரி)

✪ இரண்டாமிடம் - ச.சாருபா (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

மூன்றாமிடம் - ரமேஸ்பிரகாஷ் (செங்குந்த இந்துக் கல்லூரி)

மேற்படி கண்காட்சிப் போட்டியில வெற்றியீட்டிய ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வருமாறு.

✪ முதலாம் இடம் - கோமதி செல்வநாதன் (யாழ்.மத்திய கல்லூரி)

✪ இரண்டாமிடம் - செ.ஸ்ரீலோகநாதன் (யாழ். மத்திய கல்லூரி)

✪ மூன்றாமிடம் - ஆ.டொமினிக் ஜீவா (யாழ்.மத்திய கல்லூரி), வி.சிவகரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), வி.பாலமுருகன் (யாழ். மத்திய கல்லூரி).

(ஐ-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**கனகம்மா நாகரத்தினம்**

மலர்வு 06-06-1936 — உதிர்வு 15-06-2001

அன்பினுக்கோர் உறைவிடமாய்
பண்பினுக்கு அணிகலனாய்
குணமென்னும் குன்றேறி
பாங்குடனே வாழ்ந்து மறைந்த
எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
உமதான்மா உய்தி பெற
இதயமுருகி இறைஞ்சுகிறோம்.

– குடும்பத்தினர்.

*சந்திரவளவு,*
*துன்னாலை தெற்கு.*

(89767)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தின்
முன்னாள் அதிபர்
**திரு.கிருட்டினர் சிவமணி**

அவர்கள் இலங்கை அதிபர் சேவையின் Iஆம் தரத்துக்கு 1994.01.01ஆம் திகதி முதல் பதவி உயர்வு பெற்றமையை உளமாரப் பாராட்டுவதுடன் அவரின் சமய, சமூக, கல்விப் பணிகள் சிறக்கவும் வளம் பல பெற்று நீடிய ஆயுளுடன் சுகமே வாழவும், எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
*யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.*
*சுழிபுரம்.*

(90038)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 - 10 - 1967



மறைவு 29 - 06 - 1997

**அமரர் குகதாசன் சிறீதரன்**

திதி:- 15.07.2001

மூத்தண்ணா நீயும் முதல் வந்தாய் எங்களிடம்
பார்த்து மகிழ்ந்தோம் பழகினோம் பாசமுடன்
பார்த்திருந்த எம்மைப் பரிதவிக்க விட்டிங்கு
மூத்த நாயனாரும் முத்தி நலம் தந்தாரோ?

- குடும்பத்தினர்.

*முதலியார் வளவு,*
*இமையாணன், உடுப்பிட்டி.*

(90063)

மாலைத் தாரகையுடன் ஒன்று சேர்ந்து
காலைக் கதிரில் கண்விழிக்க.

றொக்லண்ட்
திரீஸ்டார் ★★★




ரூ.255/–




ரூ.80/- ரூ.135/- ரூ.255/-

மறுநாளில் உடலை வருத்தாத தோழன்.

75 ஆவது ஆண்டின் சிறப்பு.

தயாரிப்பு
றொக்லன்ட் டிஸ்டிலரீஸ் லிமிட்ட

விநியோகஸ்தர்: வாமாஸ் வைன் ஸ்ரோர்ஸ், 148/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 074- 718461

(C/17413)

# மலைக்க வைக்கும் மருத்துவ சாதனைகள்!

**வை**த்தியர் என்றால் கடவுளுக்கும் மேலானவர் என்கின்ற கருத்து விஞ்ஞானம் எல்லைமீறி வளர்ந்துவிட்ட நாடுகளிலும் ஏற்கப்பட்ட ஒன்று. வைத்தியரின் கைராசியே பலருடைய நோய்க்கு மருந்தாகி விடுவதுண்டு. பேச்சிலே இனிமையும் கனிவும் அனுபவத்தில் முதிர்ச்சியும் நோயாளியைக் கையாளும் திறமையும் தன்மையும் ஒரு சிறந்த மன வைத்தியத்தை முதலில் செய்துவிடும். பின்பு மருந்துக்கு அதிகம் வேலை இருக்காது.


ஆங்கில வைத்தியமானாலும்சரி நாட்டு வைத்தியமானாலும்சரி, இந்தக் கைராசி என்


மன நிறைவு முக்கியம்

பது நோயை மாற்றுவதில் கணிசமான பங்கு வகிக்கின்றது என்பதனை மறுப்பதற்கில்லை. இத்தகைய நிலைமை இன்று மாறிவருகின்றது என்பதுதான் பலருக்குக் கவலை தருகின்றது.

தற்போது பெருமளவு தொழில்நுட்ப உபகரணங்கள் வைத்தியருக்கும் நோயாளிக்கும் இடையில் புகுந்துவிடுகின்றன. என்னதான் துல்லியமாக அவை செயற்பட்டாலும் அவற்றைச் சரிவர இயக்கவும் பெறுபேறுகளைப் புரிந்துகொள்ளவும் வைத்தியர் தன்னைப் பரீட்சைப் படுத்திக் கொள்ளல் வேண்டும். மருத்துவக் கல்விக்கு மேலாக ஒரு தொழில்நுட்பக் கல்வித்தகைமை வைத்தியர்களுக்கு இன்று அவசியமாகி வருகின்றது. இந்த நிலைமை பல நன்மைகளை அள்ளி வழங்கினாலும் மனத்திருப்தி என்பது மணிக்கட்டில் நாடி பிடித்துப் பார்க்கும் நாட்டு வைத்தியரின் ஸ்பரிசத்தில் கிடைப்பது போன்று வேறு எங்கும் கிடைப்பதில்லை.

அத்தகையதோர் அன்பான, புனிதமான ஸ்பரிசத்தை நோயாளிகள் இழந்து வருகிறார்கள் என மேற்குலக நாடுகள்கூடக் கவலைப்படு



கின்றன. அத்தகைய திருப்தியை இழக்கப் பெரும்பாலானோர் தயாரில்லை. இப்போதெல்லாம் நோயாளியின் படுக்கையைச் சுற்றிவர ஏராளமான எலக்ரோனிக் உபகரணங்கள் மின்னிக்கொண்டிருக்கின்றன. நோயாளியைத் தொடாமலே வெகு தொலைவில் இருந்தே வைத்தியர் கணிப்புக்களை மேற்கொள்ள முடிகின்றது. தீவிர நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களுக்கு இத்தகைய வசதிகள் ஒரு பெரும் வரப்பிரசாதமே.

நோயைக் கண்டறிய எக்ஸ்ரே கருவிகள் பயன்படுத்தப்படுவது ஆபத்தானது என்று கருதப்பட்ட காலம் மலையேறிவிட்டது. அதைவிட ஆழமாக ஸ்கேனிங் கருவிகள் உடலினுள் கதிர்களைச் செலுத்தி துல்லியமான ஆய்வுகளைச் செய்து வருகின்றன. இவை கணனிகளுடன் இணைந்து செயற்பட்டு நோயைச் சரிவர இனங்காண உதவுகின்றன.

CT ஸ்கான் எனப்படுவது தற்போது இருதய நோயாளிகளின் பிரச்சினைகளுக்கு ஒரு விடிவாகி வருகின்றது. ஸ்கான் செய்யும் பொழுது நோயாளிக்கு மார்புவலி அல்லது மாரடைப்பு ஏற்படுவதற்கான சாத்தியங்களை இது முன்கூட்டியே தெரிவிக்கவல்லது. இத்தகைய வசதி ஆண்டுதோறும் பல லட்சம் அமெரிக்கர்களின் மாரடைப்பினாலான மரணத்தைத் தவிர்த்து வருகின்றது. எனவே போஸ்ட்மோர்ட்டத்தில்தான் மாரடைப்பைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நிலை அங்கெல்லாம் எழுவது குறைவு.

தொலைநோக்கி, தொலைபேசி தொலைக்காட்சி, தொலைநகல் வரிசையில் தற்போது புதிதாக அறிமுகமாகி வர இருப்பதுதான் தொலைசிகிச்சை.

இதன்படி பிரிட்டனிலோ அமெரிக்காவிலோ இருந்து அதிநவீன கருவிகளான சத்திரசிகிச்சை றொபோக்களை (Surgical Robots) எந்த நாடுகளும் இறக்குமதி செய்துகொள்ளலாம்.

இக்கருவிகள் இலங்கையின் வைத்தியசாலை ஒன்றின் சத்திரசிகிச்சைக்கூடப் படுக்கையில் இருக்கும் நோயாளி ஒருவருக்கு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும். அவற்றை இயக்குவதற்கான கட்டளைகளை ஒரு சத்திர சிகிச்சை நிபுணர் அமெரிக்காவில் இருந்து வழங்க இயலும். அவரால் இந்தச் சத்திரசிகிச்சையை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்துகொண்டே மிகத் துல்லியமாக மேற்கொள்ள இயலும்.

தொலை சிகிச்சை எனப்படுவது, ஆளைத் தொலைப்பதாக அமையாது. அந்தத் தொலை என்பது தூரத்தினையே குறித்து நிற்கின்றது. அதுவும் சில்லறை வைத்தியத்துக்கு என்றில்லாமல் இருதயமாற்றுச் சத்திரசிகிச்சை போன்ற பெரும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள என்றெல்லாம் தயாராக அந்த றோபோக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எனவே இனிச் சத்திரசிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை என்றெல்லாம் எவரும் கலங்கத் தேவையில்லை. தொலைத்தொடர்பு வசதிகள் தடங்கல் இல்லாமல் பார்த்துக்கொண்டால் சரி. எனவே இத்தகைய சிகிச்சை முறைகள் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துவரமாட்டாது.

சத்திரசிகிச்சை ஆரம்பமானால் அது முடிவடையும்வரை அமெரிக்காவில் இருக்கும் நிபுணரின் கட்டளையிடும் கணனி தொலைவில் இருக்கும் நாட்டிலுள்ள றோபோக்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தாக வேண்டும். இடையில் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டால் அவ்வளவுதான்.

சத்திரசிகிச்சையின்போது வைத்தியர் நோயாளியைத் தொட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் இங்கு எழுவதில்லை. அவரது கைகளைப் பலதடவைகள் கழுவவேண்டிய தேவையும் இருப்பதில்லை. தொற்று ஏற்படலாம் என்று நோயாளி கலங்கத் தேவையில்லை. நெஞ்சறைக் கூட்டுக்குள் தனது கையை வைத்து இதயத்தைக் கையில் எடுக்க வேண்டிய அவசியம் சத்திர சிகிச்சை நிபுணருக்கு எழப்போவதில்லை. எனவே இந்த வைத்திய முறைகள் மிகவும் சுகாதாரமானவை எனக் கருதப்படுகின்றன.

மேலும் சிகிச்சையின்போது மயங்கிக் கிடக்கும் நோயாளியைச் சுற்றிவர பல வைத்தியர்களும் தாதிமாரும் மொய்க்க வேண்டிய அவசியமும் இனி எழப்போவதில்லை. அருகில் அவசரகால உதவிக்கென ஒரு வைத்தியரும் ஒரு தாதியும் அவதானிப்பாளர்களாக பார்த்திருந்தால் போதுமானது.

வெறுங்கண்களால் பார்ப்பதைவிட கணனித் திரையில் நோயாளியின் உடல் உறுப்புக்களை வைத்தியரினால் துல்லியமாக உருப்பெருக்கிக் காண முடிகின்றது. எனவே ஆராய்ச்சிகளும் சிகிச்சையும் நுணுக்கமாக மேற்கொள்ளப்பட முடியும். ஆயுதங்களின் முனைகளில் அமைந்திருக்கும் உருப்பெருக்கும் வசதியுடைய கமெராக்கள் நுட்பமாக உள்ளுறுப்புக்களை கணனித்திரையில் காட்டவல்லன.

சத்திரசிகிச்சையை நேரடியாக மேற்கொள்ளும்போது வைத்தியருக்குக் கைநடுக்கம் எடுத்தால் நோயாளியின் நிலைமை பரிதாபம்தான். கணனித்திரையில் தெரியும் உறுப்பின்மீது 'மவுஸ்' போன்ற கருவிகளை இயக்கி வைத்தியர் சிகிச்சையை மேற்கொள்ளும் வேளை கை நடுங்கினாலும் தொலைவில் இயங்கும் றோபோக்களின் கத்திகளில் நடுக்கம் இருக்காது.

கணனிக் கருவிகளை பல அடி தூரத்துக்கு நகர்த்தினால் நோயாளியின் உடலில் றோபோக்களின் கரங்கள் சில அங்குலங்களே நகரும் என்பதால் துல்லியமாக அறுவை சிகிச்சையை மேற்கொள்ள முடிகின்றது.

கணனித் திரையில் ஒரு முன்னோட்டமாக இலக்கைத் தெளிவாக அடையாளம் கண்டு அறுவை, அகற்றல், உட்பதித்தல் வேலைகளைச் செய்துபார்த்து திருப்திப்பட்டு எல்லாம் சரியாக இருந்தால் முழு உருவம் கொடுக்கும்போது சத்திரசிகிச்சை சிக்கல் ஏதுமின்றி ஒப்பேறிவிடும். அதற்கான காலம் வெகுவிரைவில் வாய்த்துவிடும்.

சத்திரசிகிச்சை என்றாலே பலருக்கு நடுக்கம் எடுக்கின்றது. பயந்து நடுங்கி சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு வரும் நோயாளியிடம் அன்பாகவும் ஆதரவாகவும் கதை கேட்டுப


சீ ரீ ஸ்கான்

ராக்குக் காட்டியபடியே நிபுணர் அனஸ்தீஸியா மயக்க மருந்தைக் கொடுத்து விடுகிறார். இந்த 'சுகானுபவம்' இனிக் கிடைக்குமா என்பதே கேள்வி. வருங்காலங்களில் இந்த நோயாளிகளை றோபோக்கள்தான் சிகிச்சைக் கூடத்துக்குள் வரவேற்கப் போகின்றன. அவற்றைக் கண்டு கலங்கி நோயாளிகள் ஓட்டம் எடுக்காவிட்டால் சரிதான் என்கின்ற நிலை இனி.

இனியெல்லாம், சிகிச்சைகளுக்கென்று வெளிநாடுகளுக்கு விமானம் ஏறவேண்டிய அவசியம் இருக்காது. இங்கிருந்துகொண்டே இங்கிலாந்தில் தேவைப்படும் வைத்தியரிடம் channel பண்ணிக் கொள்ளலாம். அவர் அங்கிருந்துகொண்டே நோயாளியைப் பரிசீலிப்பதுடன் சத்திரசிகிச்சைக்குரிய திகதியையும் தந்துவிடலாம். இதற்கேற்றாற்போல மருத்துவ மனைகள் தம்மைச் சுதாகரித்துக் கொள்ளல் வேண்டும்.

உள்ளூர் சிகிச்சை நிலையங்களில் தொங்கும் விசேட வைத்திய நிபுணர்களின் பட்டியலில் இனி ஆங்கிலப் பெயர்கள்தான் முன்னணியில் திகழப் போகின்றன. அவர்களின் முகம் தெரிந்தோ தெரியாமலோ சிகிச்சை ஒப்பேறிவிடும். கட்டணம்தான் மிக அதிகமாக இருக்கப்போகிறது. வைத்தியர்களும் இனிக் கிளினிக்குக்குக் கிளினிக் எனப் பறந்து அலைந்து திரியாமல் இருந்த இடத்தில் இருந்துகொண்டே உலகம் முழுவதும் சிகிச்சை அளிக்க இயலும்.

**Douglas Boyd** என்ற இருதய சத்திர சிகிச்சை நிபுணர் அதிசயிக்கத்தக்க இந்தச் சாதனைகளை கணனிமுன்னே இருந்துகொண்டு ஆற்றி வருகிறார். கட்டளைக் கணனியில் அவர் செயலாற்றும்போது கண்முன்னே சற்றுத் தொலைவில் றோபோக்கள் சிகிச்சையை மேற்கொள்ளுகின்றன. நோயாளியைத் தான் தொடாமலேயே இதுவரை இழப்போ இறப்போ ஏதுமின்றி எழுபது வரையான சத்திரசிகிச்சைகளை அவர் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்.

இருதய, சிறுநீரக மற்றும் சிக்கலான




சத்திரசிகிச்சை நிபுணர்

சத்திர சிகிச்சைகள் தொடர்பாக உலகெங்கும் 400 வரையான வைத்திய நிபுணர்கள் இயந்திரங்களை (Robots) கையாளப் பழகிவிட்டார்கள். இனிமேல் கட்டளைக் கணனிக்கும் றொபோக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியை அதிகரிக்க வேண்டியதுதான் பாக்கி. அடிக்கணக்கில் தற்போது உள்ள இந்த இடைவெளி ஆயிரக்கணக்கான மைல்களாக அதிகரிக்கப்படுவதில் தொழில்நுட்ப ரீதியாக எந்தச் சிக்கலும் இல்லை. அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில இருக்கும் **Dr.Michel Ganger** உம் பிரான்ஸில் இருக்கும் பேராசிரியர் **Jacques Marescaux** உம் இத்தகைய தொலை சிகிச்சையொன்றிற்கான திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே தம்மிடையே பரீட்சார்த்தமாக சில கருவிகளை இயக்கியும் பார்த்துவிட்டார்கள்.

பல ஆயிரம் மைல்களுக்கு சமிக்ஞை செல்ல எடுக்கும் நேரம் 200 மில்லி செக்கன்கள் என்றால் அந்த இடைவெளி எந்தப் பாதிப்பையும் தரமாட்டாது எனச் சொல்லப்படுகின்றது. நேரம் செக்கன் கணக்கில் விரயமாவதையே நிபுணர்கள் வரவேற்கவில்லை. கட்டளை கொடுக்கப்பட்டால் அதை சில மில்லி செக்கன்களில் கருவிகள் நிறைவு செய்துவிட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நேரடியாகச் சத்திரசிகிச்சை செய்யும் நிபுணர்கள் தாம் நினைத்ததை செயல்படுத்தும் வேகம் இதைவிடக் குறைவாகத்தான் இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

மணித்தியாலங்கள் விரயமாவதையிட்டே கவலைப்படாத எமக்கு மில்லி செக்கன் கணக்கில் வேகம் அவசியம்தானா? இதன் பெறுமதி அறிவோமா? அடுத்து றோபோக்களின் சிகிச்சையில் நோயாளிமீது பாரபட்சம் காட்டப்படும் நிலைமைகள் எழமாட்டாது. தனிப்பட்ட கோபதாபங்களை றோபோக்கள் மனதில் வைத்துக்கொள்ள மாட்டாதவை.

ஒரு வைத்தியர் தொலைசிகிச்சையின்போது தனக்கு அனுமதிப்பத்திரம் இல்லாத ஒரு நாட்டில் உள்ள நோயாளிக்கு சத்திர சிகிச்சை செய்யவேண்டிய நிலைமை எழுகின்றது எனவே அதற்கான சட்டவாக்கங்கள் அவசியமாகின்றன. தொலை சிகிச்சை பிசகுவதற்கு பல காரணிகள் உடந்தையாக இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர் எவர்மீது வழக்குத் தாக்கல் செய்வது என்கின்ற கேள்வி எழத்தான் செய்யும். நீதிமன்றத்தில் எதிரிக்கூண்டில் தொலை நிபுணரோ உள்ளூர் அவதானிப்பு நிபுணரோ உள்நாட்டு அல்லது தொலைவு வைத்திய நிலையமோ மின்சாரம் வழங்கும் நிறுவனமோ தொலைத் தொடர்பு நிறுவனமோ றோபோக்களை உற்பத்தி செய்த நிறுவனமோ கணனி உற்பத்தி நிறுவனமோ கால்கடுக்க நிற்க




வேண்டிய நிலைமைகள் எழலாம். இவர்கள் ஆள்மீது ஆள் பழியைப்போட்டுத் தப்பிக் கொள்ளும்போது பாதிக்கப்பட்டவர் குழம்பத்தான் வேண்டும்.

**மு. சிவநேசன்**

என்னதான் என்றாலும் விரைவில் சத்திர சிகிச்சை றோபோக்கள் தாராளமாகச் சந்தைக்கு வந்துவிடப் போகின்றன. அவற்றின் விலைபற்றிக் கற்பனையிலும் நினைக்க வேண்டாம். ஏதாவது கனேடிய மற்றும் பிரிட்டிஷ் உதவிகள் கைகொடுக்கலாம். ஒரு எக்ஸ்-றே இயந்திரத்துக்குத் தவிக்கும் நாட்டில் இவையெல்லாம் இப்போதைக்குக் கைகூடும் என்று கருத இயலாது.

CT ஸ்கேன் போன்ற ஆய்வுமுறைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் நோய்நிலைமையையும் தேவையான சிகிச்சையையும் சத்திரசிகிச்சை றோபோக்களே தீர்மானித்து மேற்கொள்ளத்தக்க வகையில் ஆய்வுகள் முனைப்புப் பெறுகின்றன. இதற்காக CT ஸ்கேனரை சிகிச்சை றொபோக்களுடன் இணைந்து அதன் சமிக்ஞையை இது புரிந்துகொள்ள வழிசமைத்தாக வேண்டும். அப்படியானால் சிகிச்சையின்போதும் வைத்திய நிபுணர் ஒதுக்கப்பட்டு விடுவார் போலத் தெரிகின்றது. இத்தகைய அபிவிருத்தி இன்னும் இருபது ஆண்டுகளில் சாத்தியமாகலாம் எனக் கருதப்படுகின்றது.

இயந்திர வாழ்க்கையில் மனிதத் தன்மைகள் பறிபோய்க் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இயந்திர இதயம், இயந்திர சத்திரசிகிச்சை என்றெல்லாம் காணப்படும் முன்னேற்றம் மனித மனங்களையும் இயந்திரமயமாக்காமல் பார்த்துக்கொண்டால் சரி. ❋

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கிலக்கல்வி

சுலபமான முறையில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில தபால் மூலமும் பயிற்சி. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (90032)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்லின **Alsation** பெண் நாய்க் குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: 75/10, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. (கீன் கல்வி நிலைய முன் ஒழுங்கை) (90051)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் நிரந்தரமாக வசிக்கும், 1971இல் பிறந்த சுவாதி நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாய் (கிரக பாவம் 32) 5' 9" உயரமுடைய அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளைப் பெற்றார் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: சி.சிவா, 37/2, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (89907)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 31 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, விஞ்ஞான ஆசிரியருக்கு படித்த அழகுள்ள மணமகளைத் தாயார் எதிர்பார்க்கின்றார். தொடர்புகளுக்கு: விள.இல.1324. மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89920)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கின்ற 29வயது, 5அடி 3அங்குல உயரமும் பூராடம் 3ஆம் பாதம் கிரகபாவமற்ற வருக்கு, மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், அண்மையில் எடுத்த புகைப்படம், சொந்த, தற்போதைய முகவரி போன்ற முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.1328, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (90033)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **C-50 Motor Cycle** உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.05, கடற்கரைவீதி, நாவாந்துறை. தினமும் மாலை 4 மணி - 6மணி வரை பார்வையிடலாம். (90045)

## இசைக்கருவிகள்

ஓர்கன் (**CASIO CTK -330) Pad** (**Yamaha DD-11**), வயலின் ஆகியன விற்பனைக்குண்டு. முகவரி: **S.S.** ஐஜேந்திரன், 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி. (கற்பகவிநாயகர் ஆலயத்துக்கு அருகாக) (90081)

## நாடக விழா

இன்று நடக்கும் வானொலி நாடக விழாவில்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின "பிறந்த மண்" நாடகம் அரங்கேறுகின்றது. கேட்டு மகிழுங்கள். அவரது நாடக நூல்கள்:-(i) யாழ்ப்பாணமா? கொழும்பா? (ii) நாடகம் எழுதுவது எப்படி? (90064)

## விற்பனைக்கு

சம்பியன் லேனில் 9பரப்புக் காணியுடன் கூடிய வீடும் கடையும், நந்தாவில் லேனில் 64ஆம் இலக்கமுடைய 'ஆனந்தவனம்' என்ற 2 1/2 பரப்புடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-V.கருணாமூர்த்தி, சம்பியன் லேன், கொக்குவில். (89910)

தனிப்பெற்றோல் பாவனையில் உள்ள வெள்ளைநிற (**FORD ESCORT**) கார், டைனிங் ரேபிள், சோக்கேஸ், ரேடியோ என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு **S.S.**நாதன்,16/3, விதானையார் வீதி, சுச்சமோட்டை, யாழ்ப்பாணம். (90040)

ஓட்டு ரோசா, குரோட்டன்ஸ் (நல்லினம்) மற்றும் பலவகைப் பூங்கன்றுகளும் பயன் தரும் கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு:-**S.K.** செல்வராஜா, கே.கே.எஸ்.றோட், இணுவில். (90087)

13 சிறி தொடர் இலக்கம் கொண்ட **LANCR A.C CAR,** 16 சிறி தொடர் இலக்கம் கொண்ட **CARNA CAR, CUS TOM LANCER HONDA 90 MOTOR BIKE, 3 CD AUDIO VIDEO** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- எஸ்.போல், 209, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (90089)

நல்ல நிலையிலுள்ள பியானோ (**Piano English Make**) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 31, கண்டி வீதி, (பஸ்ரியன் சந்திக்கு அண்மையில்), சுண்டுக்குளி. (90093)

## இறைச்சிக் கோழி விற்பனை

**Broiler, Cullbirds, Cockerels Soup Chicken** இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேட சேவை. 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (90083)

இறைச்சிக்கோழி, புறொயிலர், கல்பேட் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (90098)

**Broiler** இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. **1Kg- 140/-** வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி **T.P.3529, 2867.** (90095)

இறைச்சிக்கோழி **Boriler,** கல்பேட்ஸ் மலிவுவிலையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.334, **K.K.S.**வீதி, சிவன் கோவிலடி (குணம் கொத்துறொட்டிக் கடைக்கு அடுத்த வீடு) (90100)

புறொயிலர், இறைச்சிக்கோழி, இறைச்சிக்கான சேவல்கள், மொஸ் கோவியன் தாராக்குஞ்சுகள், முட்டையிடும் 'மொஸ்கோவியன் தாராக் குஞ்சுகள், கினிக் கோழிக்குஞ்சுகள், வெள்ளடியன் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். 52, மருதடி றோட், நல்லூர். (90094)

## மணப்பெண்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள், 1962ஆம் ஆண்டு சிவில் எஞ்சினியர், 1971 சிவில் எஞ்சினியர், 1965 கிளார்க், 1967 **B.Com** மாஸ்ரர், 1967 **T.O,** 1970 **B.Sc.** இவர்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. கிருஷ்ணா திருமண சேவை, **T.**சுப்பையா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (90096)

## திருமண சேவை

அரசஉத்தியோகம், **BUSINESS,** டாக்டர், பொறியியலாளர்கள், பட்டதாரிகள், வெளிநாட்டில் பிரஜாஉரிமை பெற்ற மணமகன்களும் சகல மதத்தவர்களுக்கும் மணமகன்கள், மணமகள்கள் உண்டு. தொடர்பு:- 'கமலக கண்ணன் திருமணசேவை', இல.3, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். செவ்வாய், வியாழன் தவிர்ந்த நாள்களில் நேரில் 11 - 5.30 மணி வரை சந்திக்கவும். (90092)

## தவறிவிட்டது

ஆயத்தடி மிருசுவிலைச் சேர்ந்த செல்லத்துரை ஜெகசுதன் என்பவரது விசேட அடையாள அட்டை(இல.091035667) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மா.நீதிராஜா நவாலி வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (90059)

306(97) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருள்ராசா மகாலிங்கம் என்பவருடைய விசேட அ.அ.(இல.0902027708) முத்திரைச் சந்திக்கும், யாழ்.மாநகர சபைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (90102)

## புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (**BROILERS**) கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:-இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (90080)

புறொயிலர் இறைச்சிக் கோழி மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சுத்தம் செய்தும் தரப்படும். தொடர்பு:- சங்கீத், 40,விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டு சந்தைக்கு அருகில்).(90074)

## வேலையாள் தேவை

கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு 35வயதுக்கு மேற்பட்ட ஆண் ஒருவர் தேவை. உடன் நேரில் வரவும் தபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (90082)

## மரக்கன்றுகள் விற்பனை

நல்ல இன பூ மரங்கள், தென்னை, கமுகு, கஸ் றோஸ், செவ்வரத்தை மற்றும் **Concrete** பூச்சாடிகள், மருந்து வகைகள் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (90084)

## வெளிவந்துவிட்டது

**A/L** அளவையியல் - **G.A.Q** மெய்யியல் மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்துக்கமைவாக விஞ்ஞானமும் - விஞ்ஞானமுறையும் - விலை 100/= ஆசிரியர்: திரு.வே.யுகபாலசிங்கம் **M.A-DIP-IN.EDU.** எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (90069)

# இதய அஞ்சலி



## திருமதி ஆறுமுகம் இராசம்மா
### (காந்தி அம்மா)

**காலத்தின் ஒளிவிளக்கு!, கருணையின் தெய்வம்!**
**களங்கமில்லா உள்ளங்கொண்டு, காலமெல்லாம்**
**இறைதொண்டு செய்து அடியவர்கள் குறைதீர்த்திட,**
**அரி ஓம் நமோ நாராயணாய என்னும்**
**அருமந்திரத்தால் அனைவருக்கும் வாக்களித்து**
**அவனியிலே எம்மைவிட்டு வீட்டு மாயவனிடம்**
**சென்ற எனதருமைக் காந்தி அம்மாவுக்கு!**
**எனது இதய அஞ்சலி!**

*ஸ்ரீ சஞ்ஜீவா*
*சைவ உணவகம்,*
*பரமேஸ்வராச் சந்தி.*

பிரிவால் துயருறும்:
**க.செல்வநாயகம்.** (90097)

# மசிடோனிய நாட்டு...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் மிகவும் கவனத்துடன் தங்களது நோக்கத்தை நோக்கிச் செல்லுக்கின்றன. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய அமைப்புகள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றன.

இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க வேண்டி நேரிடும் என்பதில் சந்தேகமில்லை. எங்களுக்காக வேறு எவராவது சண்டைபிடிக்க வரக்கூடும் என்ற மாயையில் நாங்கள் இருந்துவிடக்கூடாது. எங்களுக்காக போராட வேண்டியது நாங்களே. "நாங்கள் பிளவுபடுவோமேயானால் அழிவு எங்களை நோக்கிவரும்" என முன்னாள் இஸ்ரேலியப் பிரதமர் கோல்டா மியர் ஒருமுறை தெரிவித்தார்.

ஆனால் எங்கள் ஆள்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. யாழ்.குடாநாட்டில் இருந்து எமது இராணுவத்தை கொழும்புக்குக் கொண்டுவருவது தொடர்பாக (வாபஸ் பெறுவது) வேயர் ஸ்லோனாக்கள் நடவடிக்கை எடுக்கும் நாள்கள் வெகு தூரத்தில் இல்லை.

தன்னால் யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றமுடியாவிடினும் ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த ஸ்லோனாக்கள் அதற்குத் (குடாநாட்டைக் கைப்பற்ற) தயாராய் உள்ளனர் என்பதை பிரபாகரன் நன்கு அறிவார். ஐரோப்பிய சமூகத்தின் கட்டளையின் பேரில அல்பேனியப் பயங்கரவாதிகள் செல்லஇடமளிக்கப்பட்டதால் ஆத்திரமடைந்த மசிடோனிய மக்கள் தங்கள் நாடாளு மன்றத்துக்குள் அத்துமீறிச் சென்று ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இருப்பினும் அதற்கு முன்னரே அனைத்தும் நடைபெற்று முடிவடைந்துவிட்டன.

மசிடோனிய மக்களுக்கு ஏற்பட்ட துன்பகரமான சம்பவத்தை ஒத்த ஒரு நிலைமை இந்நாட்டு மக்களுக்கும் ஏற்படவுள்ளது. அதற்குக் காரணம் பிளவுபட்டுள்ள இந்த நாட்டு அரசியல்வாதிகளேயாவர். ஜனாதிபதி மார்ஷல் டிட்டோவின் மறைவையடுத்து துண்டாடப்பட்ட யூகோசிலோவிய நாட்டின் ஒருபகுதி தற்போது பயங்கரவாதிகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளது. நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட செர்பிய ஜனாதிபதி கூடத் தற்போது மேற்குலக நாடுகளின் நண்பராக மாறிவிட்டார்.

பிரித்தானியாவில் ஐ.ஆர்.ஏ. அமைப்பு தங்களது ஆயுத தளபாடங்களைக் கையளிக்க மறுத்துவிட்டது. இதையடுத்து பிரிட்டிஷ் அமைச்சர் டேவிட் ட்ரிம்பல தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார். ஆயுதங்களைக் கையளிக்க மறுத்த காரணத்தால் பிரித்தானிய - அயர்லாந்து சமாதானப் பேச்சுக்களில் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இவ்வாறான நிலைமையில் இந்நாட்டில் புலிகள் சமாதானத்துக்கு உடன்பட்டுத் தங்களிடம் உள்ள ஆயுத தளபாடங்களைக் கையளிப்பார்கள் என நம்பமுடியுமா? "அரசியல் கொள்கைகள் எவையாய் இருப்பினும் நாட்டுக்கே முதலிடம் அளிக்கப்படவேண்டும்" என ஒபரேன் வோக் என்னும் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் எமது நாட்டு அரசியல்வாதிகளுக்கு நாட்டைப் பற்றிய சிந்தனைகள் எவையும் இல்லை. அரசாங்கம் - மற்றும் எதிர்க்கட்சிகளின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பவர் கொழும்பில் இருந்து சுமார் 250 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கினில் அனைவருக்கும் தாழ்வு" (**TOGETHER WE WLL STAND - DIVIDED WE FALL**)

★

# திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கமெராவகைகளும், எலக்ரோனிக் பிளாஸ்கன், இதர பிளாஸ்ரிக்காலான கை அடக்க அளவு கொண்ட வாட்ச்டாம், ஜெனரேற்றருக்கு உரிய உதிரிப்பாகங்கள் (பாட்ஸ் வகைகள்) ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும்.

**"ரகு போட்டோ ரெக்னிக்"**

301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி)
(கன்னாதிட்டி சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

**FX3 கமெராவும் விற்பனைக்கு உண்டு.** (90099)

# 31ஆம் நாள் நீங்கா நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 | 15 |
| - | - |
| 05 | 06 |
| - | - |
| 1919 | 2001 |

## அமரர்
## முருகேசு செல்லத்துரை

(முன்னாள் பிரபல வியாபாரி)

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி - எம்மை**
**வாழ வைத்த தெய்வமே - எங்கள்**
**இதயக் கோயிலில் என்றென்றும் - உங்கள்**
**நினைவுத் தீபத்தை ஏற்றி வைப்போம்!**

எங்கள் குடும்பத்தின் ஒளியான அன்புத் தெய்வம் அமரர் முருகேசு செல்லத்துரை அவர்கள் மறைந்த செய்திகேட்டு எம்முடன் துயர் பகிர்ந்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (15. 07. 2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

செ.இராசம்மா (மனைவி)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (90085)

தற்காலிக முகவரி:
*புலோலி வட /மேற்கு,*
*தம்பசிட்டி, பருத்தித்துறை.*

## வவுனியாவில் 24 பேர் தடுத்துவைப்பு

வவுனியா,ஜூலை15

வவுனியா கிளர்ச்சித் தடுப்புப் பிரிவில் 24 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடந்த வியாழக்கிழமை அங்கு நேரில் சென்று பார்வையிட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக அதிகாரி ரோகித தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 21 இளைஞர்களும் 3 பெண்களும் அடங்குவர் என்றும் அவர் மேலும் கூறினார். (ஓ)

# பட்டப்படிப்பு மாணவர்கள் ஜனாதிபதிக்கு நேற்று மகஜர்

யாழ்ப்பாணம் ஜூலை 15

மாணவன் திவ்வியனை விடுதலை செய்து பல்கலைக் கழகத்தை மீள ஆரம்பிக்குமாறு கோரியும் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளை உடனடியாக நிறுத்துமாறு கோரியும் யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழகமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் அரச படையால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டு இருப்பதாகவும் அவர் சித்திவதைக்கு உள்ளாகி இருப்பதாகவும் பத்திரிகை மூலம் அறிகிறோம். இவர் ஒரு மாணவர் என்ற அடிப்படையில் அவர் தனது கல்வியைத்தொடரவும் உடல் உளரீதியான பாதிப்பிலிருந்து அவரைக் காப்பாற்றவும், தங்களுக்கு இருக்கின்ற நேர்மையான அதிகாரத்தை பாவித்து உடனடியாக திவ்வியனை விடுதலை செய்யுமாறு வேண்டுகிறோம்.

ஏற்கனவே யாழ். பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களும், வெளிவாரி மாணவர்களும் தமது பட்டப் படிப்பை உரிய காலத்தில் முடிக்க முடியாமல் பலவழிகளாலும் இன்னல்பட்டு, பல வருடம் பின்தள்ளப்பட்டு தமது கல்வியை பூர்த்திசெய்யாமல் வந்துள்ளனர். இந் நிலையில் எந்தவித வன்செயலும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறாதிருந்தும் பல்கலைக்கழகத்தைக் காலவரையறையின்றி மூடியதால் தமிழ் மாணவர்கள் கல்வியைப் பூர்த்தி செய்யவேண்டிய காலம் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் காலத்துக்குக் காலம் பல இளம் யுவதிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும், காணாமற் போயும் இருக்கிறார்கள். இந்த நிலைக்கு எந்த முற்றுப்புள்ளியும் இல்லாமல் தொடர்ந்து செல்லும் இவ்விடயத்துக்கு அண்மையில் அல்லாரையில் நடந்த வன்முறையான பாலுறவு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

குடாநாட்டில் அநாவசியமான முறையில் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்படுவதால் அவர்களுடையதும் அவர்களது குடும்பத்தினருடைய உடல், உளம், பாதிக்கப்படுகிறது. இந்நிலை தொடராதிருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறோம்

எனவே பட்டப்படிப்பு வெளிவாரி மாணவராகிய நாங்கள் பின்வரும் நிவாரணங்களை தங்களிடம் மிகவும்தயவுடன் கேட்கிறோம்.

★ மாணவன் திவ்வியன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நீக்க சட்டமா அதிபர் மூலம் நடவடிக்கை எடுத்து உடனடியாக அவரை விடுதலை செய்து அவர் கல்வியைத் தொடர ஆவன செய்யவும்.

★ காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறந்து மாணவர்களின் கல்வியைத் தொடர வழிவகை செய்யுமாறு கேட்கிறோம்.

★ வன்முறையான பாலியல் உறவுக்கு உட்படுத்தப்பட்ட அப்பாவித் தமிழ்ப் பெண்கள் விடயத்தில் சம்பந்தப்பட்ட நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி எதிர்காலத்தில் இச்செயல்கள் நடைபெறாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

★ எவ்வித காரணங்களும் இன்றி அநாவசியமான முறையில் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும் அவர்களுக்கு உடல், உளரீதியான பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எம்மால் தங்கள் முன் வைக்கப்பட்டுள்ள மேற்படி நான்கு கோரிக்கைகளுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் நாங்கள் மேற்கூறிய காரணங்களால் பாதிப்புக்கு உள்ளானவர்களிற்கும். அவர்கள் சார்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிற்கும் எமது அனுதாபத்தையும் ஒத்துழைப்பையும் நல்கும் நோக்குடன் கல்விப் பகிஷ்கரிப்பு நடத்த எண்ணியுள்ளோம். இதற்கு முன்னோடியாக இவ்வாரம் அடையாள பகிஷ்கரிப்பு நடத்துகின்றோம்— என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## ஈழத்துச் சிதம்பரம் தேவி மஹோற்சவம்

காரைநகர், ஜூலை 15

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தின் வருடாந்த தேவி மஹோற்சவம் இன்று முற்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கல் உற்சவமும் நடைபெறும்.

உற்சவ தினங்களில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து தினமும் காலை 7 மணிக்கு 782 ஆம் இலக்க பஸ் சேவையும், 8.15 மணிக்கு 786 ஆம் இலக்க பஸ்சேவையும் ஆலயம் வரை இடம்பெறும்.

(ஐ-7-10-73)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கோண்டாவில் நேவிபடி காளிகோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

(ஐ-7)

★ ★ ★

புத்தூர் ஸ்ரீ விஸ்வநாதர் ஆலய விசாலாட்சி அம்மன் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இம் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஐ-7-11

★ ★ ★

வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(ஐ 10)

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான ஸ்ரீ சொர்ணாம்பிகாதேவி மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (ஐ-4)

★ ★ ★

அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் இறுதி நாளான இன்று பிற்பகல் 5 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

நாளை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்,

(ஐ-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அல்பிறட் வியாகுலம்மா
(செல்லம்)

வலித்தூண்டல் கீரிமலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கில் வசித்து தற்போது பண்டத்தரிப்பில் வசித்து வந்தவருமான திருமதி அல்பிறட் வியாகுலம்மா நேற்று முன்தினம் (13-07-2001) வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாற்கு கர்த்தரீனா தம்பதிகளின் அன்பு மகளும் அல்பிறட்டின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோசேப்பு, பேரின்பம் (C.T.B. சாரதி), ஆகியோரின் சகோதரியும் புஸ்பராணி, பாலேந்திரன் (லங்கா சிமெந்து ஊழியர்), ஆனந்தராணி, அமிர்தராணி, ஆனந்தராசா (ஜேர்மனி), வசந்தராணி (ஜேர்மனி), கமலராணி, விமலராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோசேப்பு, செபஸ்ரியாம்பிள்ளை (தபாலக ஊழியர் சங்கானை), செல்வராணி, புஸ்பராசா ஆகியோரின் அன்பு மாமியும் றூபன், றூபிகா, ராதிகா, ஜீவதா, சீலன், ஜெகன், வினோ, ஜெபசீலன், தாட்சாயினி, லக்ஷனா, தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (14-07-2001) சனிக்கிழமை பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ஞா. அல்பிறட்
(கணவர்)

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(90113)

## செல்லையா சிவசோதி (சிவா)
(காரைநகர்)

காரைநகர் முல்லைப்புலவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசோதி (ஓவசியர்) அவர்கள் 12-07-2001) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓவசியர் செல்லையா – சுந்தரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம், யோகராஜா, வில்வராஜா, கங்காகுமாரி, யமுனாகுமாரி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கம், நிர்மலாதேவி, சுபந்தா, செந்தில்ராஜா, தவயோகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்னா, விவேகா, பிருந்தா, கௌசிகன், கபிலன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஆசிரியர் மாணிக்கவாசகர், காலஞ்சென்ற ஓவசியர் ஜெகசோதி, ஓவசியர் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16-07-2001) நாளை திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
V. செந்தில்ராஜா (மருமகன்)

இல: 154/2 Canal Road
Colombo 06.
T. P. 556241

34, Lunsfield Cresent,
Scarborough
ONT MIS 3S1,
Canada.

(சி/17436)

# உள்ளத்தில் மறைந்து கிடக்கும் நற்சிந்தனைகள் உயிர்த்தெழட்டும்!

''சாவு முற்றிலும் ஒழிந்தது வெற்றி கிடைத்தது சாவே உன் வெற்றி எங்கே? சாவேஉன் கொடுக்கு எங்கே? 1 கொரி,15:54,55.

மனிதனின் பாவத்துக்காக மனுவுடல் எடுத்த இறைவன் மனுக்குலத்தின பாவங்களைத் தன் மேற் சுமந்து பாவக்கறையைத் துடைத்து எம்மை மீட்டெடுத்த திருநாள் கிறிஸ்து உயிர்ப்புப் பெருநாள். கிறிஸ்து உயிர்க்கவில்லையேல் எமது விசுவாசம் வீணானது எனப்புனித சின்னப்பர் குறிப்பிடுகின்றார்.

எமது கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆணிவேராகவும், திருச்சபையின் அடிக்கல்லாகவும் விளங்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு எமது மறு உலக வாழ்வின் முன்னோடியாக அமைந்துள்ளது.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது அவரை எதிர்த்த யூதர்களும், மறைபோதகர்களும் இயேசுவோடு ஒட்டி உறவாடிய சீடர்களும் இயேசுவின் உயிர்ப்பைப் பற்றிஐயம் கொண்டனர். இந்நிலையில் இயேசு தமது போதனையைச் சாதனையாக்குகின்றார்.

வேதனைகளும், கொடுமைகளும், பழிச்சொற்களும் நிரம்பிய சூழ்நிலையை எதிர்கொண்டு இம்மைக்கும் மறுமைக்குமுரிய புதிய பாதையை வாழ்ந்து காட்டுகின்றார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் உலகின் ஓரிடத்தில் வாழ்ந்து மரித்த வரலாறு மனிதன் இயேசுவின் உயிர்ப்பு விசுவாசக் கிறிஸ்துவின் விழாவாக உலகின் எல்லாப் பாகங்களிலும் நினைவு கூரப்படுறது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் கிறிஸ்து உயிர்ப்புவிழா பல்வேறு பரிமாணங்களில் எம்மைச் சிந்திக்க அழைக்கிறது. மனிதனும் கடவுளுமான கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா என்பதற்கு அப்பால் கிறிஸ்தவ உள்ளங்களின் சிந்தனைகளையும் போக்குகளையும் தட்டி எழுப்பும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்படவேண்டிய விழாவாக அமைந்துள்ளது.

தனிமனித சிந்தனைகளும் போக்குகளும் மேலோங்கி மக்களைத் தவறான பாதைக்குத் திசைதிருப்பிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில், கிறிஸ்து உயிர்ப்பு விழா எமக்குச் சவாலாக அமைந்துள்ளது. விசுவாசக் கண்கொண்டு நோக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஆன்மீகத்தைப் பலப்படுத்தும் விழாவாகவே அமைந்துவிடுகிறது.

பயமும், சந்தேக மனப்பான்மையும், நம்பிக்கையில்லா எதிர்பார்ப்புகளும், சுயநலமும், குறுகிய சிந்தனைப் போக்குகளும் வாழ்வின் வசந்தத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. போரின் கொடுமையினால் பசுமையற்று வரண்ட நிலங்களும் மனங்களும் எஞ்சியிருக்கின்றன.

இறையன்பும், பிறரன்பும் கேள்விக்குரியதாக அமைந்துவிடுகிறது. ஒரே திருச்சபை ஒரே கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒவ்வொருவரும் தனித்தனித் தீவுகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே இந்நிலைமைகளைத் தகர்த்தெறிவோம். பசாசையும், பாவத்தையும் எதிர்கொண்டு மரித்து உயிர்த்த கிறிஸ்துவின் வழியில் எமது உள்ளத்தில் உறைந்து கிடக்கும் நல்ல சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் உயிர்த்தெழச் செய்வோம். உயிர்த்துடிப்புள்ள இறையன்பையும் பிறரன்பையும் மலரச் செய்து மகிழ்வு கொள்வோம்.

**ஜே. மாலினி**
வவுனியா

★

நன்றி:
பாதுகாவலன்

## நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன் மூலம்

# குற்ற விசாரணைப் பிரேரணைக்கு தன்னைத் தகுதியாக்கிவிட்டார் ஜனாதிபதி

## விநாயகமூர்த்தி எம்.பி. அறிக்கை

கொழும்பு, ஜுலை15

நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கும் தன்னிச்சையான, - ஜனநாயக விரோதமான - முடிவை எடுத்தன் மூலம், ஜனாதிபதி குற்றவிசாரணைப் பிரேரணைக்குத் தனனைத் தகுதியானவராக்கி கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை மற்றும் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக அறிக்கையில் அவர் கூறியுள்ளதாவது:-

நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைத்துள்ள ஜனாதிபதி, எதிர்வரும் ஒகஸ்ட் 21ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளளார்.

ஜனாதிபதி மேற்கொண்ட இந்த முடிவுகள் சட்ட விரோதமானதும், ஜனநாயகமற்றதுமாகும். அவர் இவ்வாறு முடிவு செய்யததின் நோக்கமும், தேவையும் என்ன?

பாதுகாப்புப் படையினரால் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதை தடுப்பதற்காகவோ -

தமிழ்ப்பிரதேசங்களில் தொடரும் பொதுமக்கள் மீதான விமானக் குண்டுவீச்சுக்களை நிறுத்தவோ -

சமாதானத் தீர்வொன்றை ஏற்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளுடன் பேசவோ -

இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வொன்றைக் காணும் ஆவலினாலோ -

யுத்த நிறுத்தத்தின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவந்து, நாட்டில் அமைதி ஏற்படுத்தும் உயரிய நோக்கத்தினாலோ -

ஜனாதிபதி இந்த முடிவுகளை எடுக்கவில்லை.

சிறுபான்மை அரசு கவிழாமல் காப்பாற்றுவதற்காகவே, - எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதைத் தடுப்பதற்காகவே - இந்த முடிவை ஜனாதிபதி எடுத்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் அரசாங்கம் தோற்கடிக்கப்படும் என்பதை ஜனாதிபதி உணர்ந்திருந்தார்.

ஜனாதிபதி என்பவர் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, பக்கச் சார்பற்றவராக இருக்க வேண்டும்.

### ஜனாதிபதி செய்யவேண்டியது என்ன?

அரசாங்கம் தனது பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் இழக்கக்கூடிய தற்போதைய சூழ்நிலையில் -

பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி ஜனாதிபதி பிரதமரிடம் கோரியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை அவர் அவ்வாறு செய்யவில்லை. ஜனாதிபதி ஜனநா யகவாதியாகவும், பக்க சார்பற்றவ ராகவும் இருப்பவராக இருந்தால் முதலில் இதனை அவர் செய்திருக்க வேண்டும். அத்துடன் வாக்கெடுப்பில் அரசாங்கம் தோற்றால், மாற்று அரசை உருவாக்கும் வாய்ப்பை எதிர்க்கட்சித்தலைவருக்கு ஜனாதிபதி அளிக்க வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட முன்னரேயே ஜனாதிபதி இவ்வாறு செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் கட்சித் தலைவியாக மட்டுமே செயற்படுகிறார். இந்த நாட்டின் ஜனாதிபதியாக அவர் நடந்து கொள்ளவில்லை.

தற்போதைய அரசாங்கம், பெரும்பான்மைப் பலத்தை இழந்துவிட்டதால் அதன் மீது நம்பிக்கையற்றுவிட்டதாக, ஜனாதிபதியுடனான தனிப்பட்ட சந்திப்புக்கள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் தெரிவித்து வந்தோம்.

ஜனாதிபதி தற்போதைய தனது இரு முடிவுகள் மூலம் அவர் மீது குற்றப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதற்குத் தன்னை தகுதியுடையவராக்கியுள்ளார்.

ஆகவே, சட்ட விரோதமாகவும் ஜனநாயவிரோதமாகவும், தன்னிச்சையாகவும் ஜனாதிபதி செயற்படுவதைத தடுப்பதற்கு, நாட்டின் அனைத்து ஜனநாயக ஆதரவுச் சக்திகளும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

நாடாளுமன்றத்தை இரு மாதங்கள் செயற்படாமல் தடுத்து, அதனை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு என்ன அவசியம்?

அவரால் நேர்மையான காரணத்தைக் கூற முடியுமா?

அவரால் அத்தகைய காரணத்தைக் கூற முடியாது என்றே நினைக்கின்றேன். அவரது முடிவுகள், அவரது நோக்கத்தை அப்பட்டமாகக் காட்டுகின்றன.

எதிர்வரும் ஒகஸ்ட் 21ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப் போவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதனை நடத்தும் காரணமும் தெளிவற்றதாகவே உள்ளது.

நாட்டில் சமாதானம் நிலவுவதற்கு வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு கௌரவமான - ஏற்றுக் கொள்ளக்கூடியதீர்வு ஒன்று கிட்ட வேண்டும்.

அதற்கு ஜனாதிபதி யுத்த நிறுத்தத்தை அறிவித்து, அதன் மூலம் சகஜமான சூழ்நிலையை உருவாக்கி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பிறகே ஜனாதிபதி புதிய அரசமைப்புக் குறித்து சிந்திக்க முடியும் - அத்துடன் விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்த பின்னரே புதிய சட்ட வரைவை அவர் தயாரிக்க முடியும்.

அதன் பின்னர் அவசியமானால் சர்வஜன வாக்கெடுப்பை ஜனாதிபதி நடத்தலாம்.

அரசாங்கம் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூட முடியாத நிலையில், அவசியமற்ற சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு ஏன் பணத்தை விரயமாக்க வேண்டும்?

இவ்வாறு அந்த அறிக்கையில் விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்துள்ளார். (ஐ-ஒ)

## உருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம்,ஜுலை15

கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளருமான பொன்.சபாபதியின் திருவுருவப்படம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கைதடி - நவபுரம் சனசமூக நிலைய மண்டபத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது.

1961ஆம் ஆண்டுமுதல் சுமார் 7ஆண்டுகள் பொன்.சபாபதி நவபுரம் மக்களுக்குப் பல்வேறு சேவைகளை ஆற்றியிருந்தார் என நவபுரம் சனசமூக நிலையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## நல்லை ஆதீன முதல்வருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஜுலை15

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய, நல்லை ஆதினம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேருவார்.

தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது கனடாவில் உள்ள ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகத்தையும், அதற்கு முன்னதாக இடம்பெற்ற மகா யாகத்தையும் இலங்கை இந்திய சிவாச்சாரியார்களை ஒன்றிணைத்து நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துசேரும் சுவாமிகளுக்கு ஆதீன மரபுப்படி பாத பூஜை உள்ளிட்ட வரவேற்பு நல்லை ஆதீனத்தில் வைத்து அளிக்கப்படும். (ஐ-173)

## மல்லாவியில் கால்நடைகளுக்கு நோய்

வவுனியா,ஜுலை15

மல்லாவி அம்பலப்பெருமாள் குளம் தமிழ்க்கலவன் பாடசாலைப் பகுதியில் கால்நடைகளுக்கு கால் வாய்ப்புண்நோய் பரவிவருகிறது.

இதனால் அப்பகுதியில் பால் விற்பனை மற்றும் கொள்வனவு, இறைச்சிககாகக் கால்நடைகள் வெட்டப்படுதல் ஆகிய செயற்பாடுகளை சுகாதாரப் பிரிவினர் தடை செய்துள்ளதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன. (ஒ)

## இலக்கியம் காட்டும் அமைச்சர்களும் அவரிடம் விளங்கிய குணச்சிறப்புகளும்

**இலக்கியச் சோலை**

**உதங்கா**

காப்பியங்கள் பாடப்படும்போது காப்பிய கால நிலைகளை வைத்தே புலவர்கள் பாடுவார்கள். அந்தக் காலத்தில் ஜனநாயக முறைப்படி அரசனைத் தேர்ந்தெடுப்பது இல்லை. மந்திரிகளையும் அரசனே நியமிக்கின்றான். அந்த மந்திரிகளது தன்மையைச் சிறப்பாக திருக்குறள் எமக்குத் தருகிறது; உதாரணத்துக்கு அமைச்சு என்னும் அதிகாரத்தில் மந்திரிகளின் இயல்புபற்றி

*மதிநுட்பம் நூலோடுடையார்க் கதிநுட்பம்*
*யாவுள முன் நிற்பவை*

மதிநுட்பம் இயல்பாக நிறைந்து அதோடு கல்வியறிவும் உடைய அமைச்சர்க்கு அவரை எதிர்த்து அழியாது நிற்கக்கூடிய சூழ்ச்சிகள் எவையுமே நிற்கமுடியாது. அதாவது நடந்து முடிந்த காரியங்களை வைத்து நடக்கப்போகிறவற்றை ஊகிப்பது மதி நுட்பம். இது அமைச்சர்களுக்குச் சிறப்பான குணமாகும்.

அதேபோல்

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்றுபவர்.*

நேர்ந்த காயம் ஊழ் வினையால் நடந்ததேயாயினும் அதையும் மாற்றவல்லவர். விதியைக்கூட மதியால் வெல்ல வல்லவர்.

மேலும்

*மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார்*
*உயிர் நீப்பர் மானம்வரின்*

ஒரு மயிர், தன்னில் நின்று நீங்கினாலும் கவரிமான் தன் உயிரை விடும் தன்மை போல மானமுள்ள அமைச்சர்கள் சிறந்த மான உணர்ச்சி உடையவர்கள்.

இந்த மூன்று குறள்களினதும் கருத்தை கம்பர் தமது இராமாயணத்தில் ஒரேஒரு விருத்தத்தில் அழகாக எடுத்து உரைக்கிறார். இலக்கியம் மூலம் நீதி போதித்தல் கவர்ச்சியானது. பாடல் இதுதான்.

உற்றது கொண்டு மேல்வந்துறு பொருளுணருங் கோளார்
*மற்றது வினையின் வந்ததாயினு மாற்றலாற்றும்*
*பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியரரிய நூலுங்*
*கற்றவர் மான நோக்கிற் கவரிமாவனைய நீரார்.*

அதாவது தசரதனது மந்திரிகள் நேர்ந்த காரியத்தைக் கொண்டு இனிமேல் நேருங் காரியத்தை ஊகித்து அறியும் மதி வன்மை உடையவர். நேர்ந்த காரியம் வினைப்பயனாக நேர்ந்ததாயினும், அதனை மாற்றுதல் செய்யும் தன்மையினர். கற்கவேண்டிய நூல்களைக் கற்றவர். நல்ல குடிப்பிறப்பினையுடைய சிறப்பினையுடைய பெருந்தகையாளர். - உயிரினும் சிறந்த மானத்தைக் காத்தலை நோக்கினால் ஒரு மயிர் நீப்பினும் உயிர் தரியாத கவரிமானை ஒத்த தன்மையுடையவர்.

இது மட்டுமா?

*தம்முயிர்க்குறுதி யெண்ணார் தலை மகன் வெகுண்ட போதும்*
*வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்*
*செம்மையிற்றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங்காலம்*
*மும்மையும் முணரவல்லா ரொருமையே மொழியு நீரார்*

தலைவன் கோபித்தாலும், அதனால் தமதுயிரிற்கு ஊறு வந்தாலும் அத் தலைவனது கோபத்தையும் தாங்கிநின்று நீதியைக் கைவிடாது உரைக்கும் இயல்பினர். ஒரு முறையல்ல பல முறை இடித்துக் கூறும் இயல்பினர். தெரிய வேண்டிய முக்காலமும் உணரவல்லவர். தாம் நன்கு ஆராய்ந்து எடுத்த முடிவைப் பலவாறாகக் கூறின் மயக்கத்துக்கு இடமாகும். என்று ஒன்றையே தலைவனுக்குக் கூறுபவர்.

தலைவனது நன்மையையே கருதி நாட்டு நன்மையையே கருதிச் செயற்படுபவர்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த அமைச்சர்கள் இருக்கும் போது, நாட்டில் சமாதானம் சுபிட்சம் என்பவற்றிற்கு ஏது குறை? ஒரு பொழுதும் அவர்கள் வீடு கொளுத்துகிற ராஜாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுக்கிற மந்திரிமாராக இருந்ததே கிடையாது.


எரிக்கனோஷ்

✣ உங்கள் அழகை மென்மேலும் மெருகூட்ட
✣ உங்கள் முகப்பொலிவுக்கமைவாக பல் கட்டவேண்டுமா?

இதோ!

☆ சீன முறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களின் கைவண்ணத்தில் ஒளி புகுமுறையில் OPAQUE MATERIAL இல் பொருத்தப்பட்ட அழகிய சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும் -
☆ இதற்குமுன்பு வேறெங்காவது பல்கட்டி உங்களுக்கு திருப்திப்படாத பட்சத்தில் அதனை மீள அழகிய முறையில் சரிபார்த்துக்கொள்ளவும் -
☆ மிதந்த பற்களுக்கு 'கிளிப்' போட்டுக்கொள்ளவும் -
☆ கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்!


எரிக்கனோஷ்


பல்கட்டுமிடமும், மூக்குக்கண்ணாடி அகமும்
564, 566, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். T.P. 2486

*கிளைகள்:*

91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

80, பழைய பொலீஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

✦ பாடசாலை மாணவர்களுக்கு விஷேட சலுகை வழங்கப்படும்.
✦ மிதப்புப் பற்கள் 3 மாதங்களில் சீரமைக்கப்படும்.
✦ சுன்னாகத்திலும், கொக்குவிலிலும் உள்ள எமது கிளைகளில் குறைந்த கட்டணத்தில் செய்யப்படும். (C/17433)



C.M.S. Governing Body for Educational Institutions

**Vacancy - Post of Vice Principal, Chundikuli Girls' College, Jaffna.**

Graduates with suitable qualifications can apply.

***Application closes on 31st July, 2001.***

**The Secretary,**
368/3A, Bauddhaloka Mawatha,
Colombo - 7.

(C/17432)



யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும்

**நன்றி செலுத்தும் வழிபாடு**

**வண.அறிவர் D.T.நைல்ஸ்**

அவர்களுடைய வாழ்க்கைக்கும், இறைபணிக்குமான
**31ஆவது ஞாபகார்த்த நன்றி செலுத்தும் வழிபாடு**

இடம்:- **பரி.பேதுரு ஆலயம் (றிம்மர் மண்டபம்)**
*மெதடிஸ்த திரு அவை, யாழ்ப்பாணம்.*

காலம்:- இன்று(15.07.2001) ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 4.00 மணி (S.L.T)

சிறப்புரை:- **"D.T.நைல்ஸ் வாழ்வும் பணியும்"**
வண.பிதா D.R.அம்பலவாணர்
*(விரிவுரையாளர், கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி மருதனார்மடம்)*

வழிபாட்டுத் தலைவர்:- **வண.பிதா K.கருணாசேகர**
*(யாழ். மெதடிஸ்த சேகர முகாமைக்குரு)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

வண.பிதா A.A.போல்
தலைவர்
J.C.U.

வண.பிதா
N.J.ஞானப்பொன்ராஜா
செயலாளர்
J.C.U.

(90101)

# அறிவித்தல்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களைப் பாடசாலை விளம்பரப் பலகையைப் பார்வையிட்டுச் செயற்படுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.* (90117) - அதிபர்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 24 - 03 - 1934



இறப்பு 06 - 07 - 1991

ஈழத்துத் தவில் மேதை

## உயர்திரு. என்.ஆர்.சின்னராசா

*குன்றனையப் புகழ் பூத்த குணக்குன்றே*
*முடியரசருக்குள்ள செல்வாக்கினைப் பெற்ற*
*இராஜதிலகமே! எல்லையில்லா தனித் தவிலை*
*ஆளப்பிறந்த வான் மதியே! தவிலுக்கொரு*
*மகுடம் பெற்று அதற்கொரு காவியம் படைத்த*
*வெண்மதியே! குருடரும் கோலூன்றி வாழலாம்*
*என்றுரைத்த முழுமதியே!*

நீங்கள் மறைந்து இன்றோடு 10ஆம் ஆண்டு நிறைவு பெறுகிறது உங்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம். பல ஆண்டுகளானாலும் உங்கள் திறன் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

*யாழ்ப்பாணம்.* (90114) - என்.ஜி.மூர்த்தி.

# மின்கம்பியிடல் வேலைக்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தின் 60' X40' அளவுள்ள பால் பதனிடல் பகுதிக் கட்டடத்திற்கு மூன்று நிலை, தனிநிலை மின்கம்பியிடல் வேலை செய்யக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களிடமிருந்து மின்கம்பியிடல் வேலைக்கூலிக்கான கேள்வி கோரப்படுகிறது. மின்னிணைப்பிற்கு வேண்டிய அனைத்துப் பொருள்களும் சங்கத்தினால் வழங்கப்படும்.

கேள்வி சமர்ப்பிப்பவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா 50/= செலுத்திப் பெற்று இப்பத்திரத்திலேயே சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் 20.07.2001 ஆம் திகதி வெள்ளி பிற்பகல் 3.00 மணிக்குப் பிந்தாது கீழ்க்காண் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேரக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

மீளப்பெறக்கூடிய கேள்விவைப்பு ரூபா 500/= சங்கக் காசாளரிடம் ரொக்கமாகச் செலுத்தப்பட்டு அப்பற்றுச்சீட்டைக் கேள்விப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 20.07.2001ஆம் திகதி வெள்ளி பிற்பகல 4.00 மணிக்கு சங்க அலுவலகத்தில் திறக்கப்படும். இவ்வேளை கேள்விதாரரோ, அவரால் எழுத்துமூலம் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமாய் இருத்தல் வேண்டும்.

கேள்வி தொடர்பான இறுதி முடிவு கேள்விப்பத்திரசபையின் முடிவாகவே இருக்கும். மேலதிக விவரங்களை சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. நா.இராசகுரு
பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (C-17435)


நாகம்மாஸ் சுன்னாகம்



சரத்குமார், மீனா,
சுவலட்சுமி, வடிவேல் நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
மாயி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
(90118)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை15

ஊரெழு சரஸ்வதி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு எஸ்.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-173)

✪ ✪ ✪

யாழ்.உதைபந்தாட்ட லீக் தலைவர் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இன்று பி.பகல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4.15 மணி - ஆனைக்கோட்டை யூனியன் வி.க. அணி. எதிர் எவறெஸ்ட் வி.க. அணி.

★ பிற்பகல் 5.15 மணி - யாழ். பல்கலைக்கழக வி.க. அணி எதிர் யாழ். பாரதி வி.க. அணி.(ஐ-3-51)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானம்).

★ மகாஜனாக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (மகாஜனாக் கல்லூரி மைதானம்) (ஐ-86)

✪ ✪ ✪

வலி.தென்மேற்கு, பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சென் மேரிஸ் முன் பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு. ம.பெ.ஞானரட்ணம் அடிகளாரும் கலந்துகொள்வார் (ஐ-135)

## காணி விற்பனைக்கு

✪ யாழ்ப்பாணம், செம்மா தெரு ஒழுங்கையில் 3 1/8 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது.

✪ உருத்திரவீணை விற்பனைக்குண்டு.

*தொடர்பு :-*
விளம்பர இல. 1330,
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (90105)

## தவறிவிட்டது

மிருசுவில் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராசா சிவகலா என்பவரது தேசிய அ.அட்டை (785330935V), விசேட அ.அட்டை (091045532) என்பன நேற்று (14.07.2001) சனிக்கிழமை கோணாவில் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

N.தளையசிங்கம்
(இராசமணி களஞ்சியம்)
*ஆலடி லேன்,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* *T.P 3501* (90115)


ராஜா யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
9 வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(C/17280)



*யாழ். மக்களே! இதோ மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று!!*


## தோலகட்டி நெல்லிரசம்

*சுவையோ சுவை! இதற்கு நிகர் இதுவே!!*
*ஒரு முறை பருகியவர் மறுமுறை மறுப்பதும் இல்லை;*
*மறப்பதும் இல்லை!*
போலிகளை வாங்கி ஏமாறவேண்டாம்.
ஒறிஜினல் லேபலுடன் புதிய சிவப்பு மூடியில் THOLAGATTY PRODUCTS என உள்ளதா? என்று பார்த்து வாங்குங்கள்!

*அருள் ஆச்சிரமம்,*
*5,கோயில் வீதி, யாழ்ப்பாணம்.* (90109) - அதிபர்.
*T.P : 3351*


# 35ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 28 ★ 03 ★ 1917



மறைவு 11 ★ 06 ★ 2001

## திருமதி தம்பையா பாக்கியம்

அன்பு உள்ளம் கொண்ட எம் அன்னையே!
ஏழைகளுக் குதவிடும் இரக்க உள்ளம் கொண்டவரே!
பசி என வருவோருக்குப் பசி தீர உணவளிப்பதில்
மட்டில்லா மகிழ்ச்சி கொண்ட தெய்வமே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

- மக்கள், மருமக்கள்,
*இணுவில் தெற்கு.* (C/17437) பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## மங்கையர்க்கரசி ஐயாத்துரை(வேலணை)

வேலணை மேற்கு, சிற்பனையைப் பிறப்பிடமாகவும் தற்போது காலியில் வசித்தவருமான திருமதி மங்கையர்க்கரசி ஐயாத்துரை நேற்றுமுன்தினம் (13-07-2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நாகரெத்தினம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சரவணை நடராசா - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலி முன்னாள் அருணா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் ஐயாத்துரையின் அன்பு மனைவியும், திருமதி தவமலர் சண்முகநாதன் (ஜேர்மனி), திருமதி பங்கயற்செல்வி சச்சிதானந்தன்(ஜேர்மனி), சிவபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சண்முகநாதன், சச்சிதானந்தன் (ஜேர்மனி), சிவமலர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற காலி வர்த்தகர் தியாகராசா, திருமதி அன்னபூரணி பொன்னம்பலம், காலஞ்சென்ற திருமதி பொன்னு சண்முகம், கந்தையா(கனடா), காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, இராமசாமி(V.T.R) ஆகியோரின் சகோதரியும் சிற்றம்பலம் (பிரான்ஸ்), சற்குணபாலன்(C.T.B) ஆகியோரின் அண்ணியும் அஸ்வினி, தீபன், சரண்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*342, பருத்தித்துறை வீதி,* ந.சற்குணபாலன்
*(சட்டநாதர் சிவன் கோயில் முன்பாக)* (மைத்துனர்)
*யாழ்ப்பாணம்.* (90112) (C.T.B. - கந்தசாமி)

## திருமதி நமசிவாயம் யோகம்மா

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் யோகம்மா நேற்றுமுன்தினம்(13-07-2001) வெள்ளிக்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கணவதிப்பிள்ளை நமசிவாயத்தின் அன்பு மனைவியும், நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், கணவதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மருமகளும், வைத்திலிங்கம், தம்பிஐயா, பசுபதி, பார்வதி, மகேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேந்திரராணி, ஜெயக்குமார், யோகேந்திரமலர், சந்திரகுமார், ரவீந்திரகுமார், தவகுமார், சிறிகுமார், நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம், தவராசா, விஜயலெட்சுமி, தேவகி ஆகியோரின் மாமியும், சிவிதா, சியோ, நிலூஜா, ரஜிவன், திவ்வியா, திவாகர், கர்சன், அஜித், மயூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும்(18-07-2001) புதன்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
*இல.26, காரைக்காட்டு லேன்,* த.வள்ளியம்மை
*வண்ணார்பண்ணை,* (சகோதரி)
*யாழ்ப்பாணம்.* (90111)

# திவ்வியன் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்தி ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்தி ஈபிடிபியினர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு, யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; குடாநாட்டில் அமைதியும், இயல்பு நிலையும் தொடர்ந்து நீடிக்க வேண்டும்; இவையே பெரும்பாலான மக்களின் எண்ணமும் வேட்கையும் ஆகும்.

ஆனால் தற்போதைய நிலைமைகளைக் குழப்பிவிட முயலும் சில சக்திகள் விஷமத்தனமான வகையில் முட்டுக்கட்டைகளைப் போடுகின்றன. பல்கலைக்கழக சமூகம் என்னும் போர்வைக்குள் ஒளிந்திருக்கும் சிலர், ஆயுத ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் கட்டத்துக்குச் சென்றபோது அவர்கள் மீது படையினர் நடவடிக்கை எடுக்க நேர்ந்துள்ளது. சமூகத்தின் அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோதமான இந்த ஆயுதங்கள் அச்சுறுத்தல் விடுப்பது யாவரும் அறிந்ததே.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பாதிப்புக்கு இலக்கான முதல் நிகழ்ச்சி இதுவல்ல. போர்ச்சூழல் தொடரும் வரையில் இதுதான் இறுதி நிகழ்ச்சியாக இருக்கும் என்றும் கூறமுடியாது. விமலதாசன், விஜிதரன், விமலேஸ்வரன், சிவாமணி, செல்வி, கேதீஸ்வரன் என்று அநியாயமாக உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்களின் பெயர்ப்பட்டியல் நீளமானது. கலைக்குரிய இந்த மரணங்கள் எல்லாம் தொடர்கின்ற போர்ச்சூழல் எமது மக்களுக்கு பெற்றுத் தந்துள்ள காயங்கள் ஆகும்.

ஆனால் கடந்த காலங்களில் பல்வேறு சோதனைகளுக்கும் ஊடாக எமது மக்கள் கல்வி வளர்ச்சியைப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாகவே செயற்பட்டு வந்துள்ளனர். கல்வியே எமது மக்களின் பெருஞ்செல்வமாகும் என்பதை உணர்ந்து அவர்கள் செயற்பட்டு வந்துள்ளனர்.

கல்வியையே மிக முக்கியமானது எனக் கருதும் மக்கள் கல்விப் பணிகள் சீர்குலைவுக்கு உள்ளாக்கப்படுவதைத் தொடர்ந்தும் அனுமதிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இரண்டாம் தவணைப் பரீட்சை, ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சை என்பன போன்ற முக்கிய பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ள மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க நிர்ப்பந்திக்கப்படுவது ஆரோக்கியமானது அல்ல.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் ஏற்கனவே சிறையில் வாடுவதைக் கண்டு கொள்ளாமலிருந்தவர்கள் ஒரு சிலரின் விடுதலைக்காக மட்டும் கூக்குரல் எழுப்புவது உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து பாடசாலைகள் ஊடாக அரசாங்க திணைக்களங்கள் அனைத்தையும் சீர்குலைக்க முயலும் எத்தனங்களின் முதற்கட்டமாகவே தற்போதைய நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இந்த நிலைமை தொடர்ந்து செல்வது என்பது அமைதியையும், அபிவிருத்தியையும் எதிர்பார்க்கும் மக்களுக்கு விருப்பத்திற்குரியதாக இருக்காது.

எனவேதான், பாடசாலைகளைச் செயலிழக்கச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராகக் கல்விமான்களும், புத்திஜீவிகளும், ஆசிரியர், மாணவர் சமூகமும் உறுதியான முறையில் செயற்பட முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு பெற்றோர்கள் ஊக்கமளிக்க வேண்டும் என்றும் ஈ.பி.டி.பி. கேட்டுக்கொள்கிறது - என்றுள்ளது.

(ம)

# கல்முனைச் சம்பவத்திற்கு பொலீஸாரே காரணம்

## குற்றம் சாட்டுகிறார் ஹக்கீம்

கொழும்பு,ஜூலை15

கல்முனை நகரில் நேற்றுமுன்தினம் உயிரிழந்த இரு முஸ்லிம் மாணவர்களும் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கியே உயிரிழந்துள்ளனர். எனவே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரியுள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை நசுக்குவதற்காக கல்முனையில் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் செயல்களால் மக்கள் பெரும் அச்ச நிலையில் உள்ளனர்.

பொலீஸாரின் சூட்டுக்கே அப்பாவிகளான மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பொலீஸார் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

(ம-3)

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்த 80 கோடி ரூபா செலவாகும்

## வாக்களிப்பு முறை குறித்தும் விளக்கம்

அடுத்த மாதம் 21ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கு 80 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியைத் திறைசேரியில் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல் திணைக்களம் செய்து வருகின்றது என்றும் -

வாக்குச்சீட்டு மோசடிகளைத் தவிர்ப்பதற்கு சில ஏற்பாடுகள் செய்யப்பட இருப்பதாகவும் -

அவர் மேலும் சொன்னார்.

உங்களுக்கு ஒரு புதிய 'அரசமைப்புத் தேவையா? என்ற கேள்வி வாக்குச்சீட்டில் இருக்கும் என்றும் -

'ஆம்' என்று தெரிவிக்க விரும்பும் ஒருவர் விளக்குக்கு நேரே புள்ளடியிட வேண்டும் என்றும் -

'இல்லை' என்று தெரிவிக்க விரும்பும் ஒருவர் பானைக்கு நேரே புள்ளடியிட வேண்டும் என்றும் -

அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

(ம-3)

### திவ்வியனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு என்பனவற்றிற்கு உட்பட்டு திவ்வியன் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எடுத்துக் கூறியுள்ளதாகவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### நான்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதான பிரஸ்தாபப் பெண் தனது பிள்ளைகளுடன் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சமயம், துப்பாக்கியுடன் அங்கு சென்ற இனம்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவரைப் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் வைத்தியப் பரிசோதனைக்காக அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-3-4-10-15-173)

### பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி நிறுவனங்கள், உயர்கல்வி அமைப்புகள் யாவும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இறங்கவே, அவையும் செயலிழந்தன. வடக்கு - கிழக்கில் கல்விச் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன. இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண பல தரப்பில் இருந்தும் எடுக்கப்பட்ட முயற்சிகள் இன்னும் பலன் தரவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் அசிரத்தை காட்டுவதே இந்த நிலைக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியன அடுத்த மாதம் இடம்பெறவிருக்கின்ற நிலையில் -

மாணவர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து அதற்கான தகுந்த தீர்வினை வழங்கி இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்கு அதிகாரிகள் பின்னடிப்பதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மிக மோசமாகப் பாதிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது விடயத்தில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். (உ)


வணிகக் கல்வி A/L 2001

கருத்தரங்கு - தொடர்

ஜூலை 16ஆம்,17ஆம், 18ஆம்,19ஆம் திகதிகளில்

| பிரிவு I : 8.00 - 11.00 | பிரிவு II: 11.30 - 2.30 |
|---|---|

ஆசிரியர்:
V.MURALEE B.B.A.(F.M. Spl.)

பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்.

(90041)



விற்பனைக்கு உண்டு

நெருப்புக் கல்
(FIRE BRICKS)
உடன் விற்பனைக்கு உண்டு.

ART ENTERPRISES
ஆர்ட் என்ரபிறைஸஸ்

150,152, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். T.P.: 2052

(90091)


பாடசாலைகளுக்கு முன்பாக

# பொலீஸார் நிறுத்தப்பட்டிருப்பது சுதந்திரமான கல்விக்குப் பங்கம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் படை அதிகாரிகளிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை15

பாடசாலைகளுக்கு முன்பாக பொலீஸார் நிறுத்தப்பட்டிருப்பது மாணவர்களின் சுதந்திரமான கல்விக்குப் பெரும் பங்கம் விளைவிக்கின்றது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் விடுதலை தொடர்பாக பொலீஸ் மற்றும் படை அதிகாரிகள் நடத்திய சந்திப்புக்களின் போது மேற்படிச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் சந்திரபால மற்றும் யாழ். மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்புக்களில் கலந்துகொண்ட சமயமே இப்படிக் கூறியுள்ளார்.

திவ்வியனின் கைதுக்குப் பின்னர் யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதைப் பகிஷ்கரிப்பது எதிர்காலக் கலவிக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது என்றும் -

திவ்வியனை உடன் விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர் மீது குற்றம் ஏதும் இருந்தால் அவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய வேண்டும் என்றும் - அவர் படை அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, தி.மகேஸ்வரன், சி.தவராசா ஆகியோருடனும் திவ்வியன் விடுதலை தொடர்பாகத் தாம் கலந்துரையாடியதாக பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை - சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் இது விடயமாகக் கல்வி அமைச்சர், உயர் கல்வி அமைச்சர் ஆகியோருடன பேச்சு நடத்தியுள்ளதாகவும அவர் தெரிவித்தார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று நடக்கும் சங்கத்தின் கூட்டத்தில் இந்த விடயம் குறித்தும் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் ஆராயப்படும் என்றும் அவர் சொன்னார்.

(ம-3)

# ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம்,ஜூலை15

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் கோரியுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தபாலகங்கள் ஊடாகவும் விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களுக்கு கட்டணங்களைச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

பாடங்களின் எண்ணிக்கையும் அவற்றுக்கான கட்டண விவரமும் வருமாறு:-

★ ஒரு பாடம் - 20 ரூபா
★ 2 பாடங்கள் - 25 ரூபா
★ 3 பாடங்கள் - 30 ரூபா
★ 4 பாடங்கள் - 35 ரூபா
★ 5 பாடங்கள் - 45 ரூபா
★ 6 முதல் 10 பாடங்கள் வரை - 60 ரூபா

(ஐ)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா திருநாவுக்கரசு (திருநாமு)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் நிற்சாமம் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திருநாவுக்கரசு அவர்கள் 14-07-2001இல் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா - இலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், கௌசலாதேவியின் அன்புக் கணவரும், மாதாநதி பொன்னரின் அன்பு மருமகனும், சுமதி, சுதாகரன் (சுவிஸ்), சுபாலினி (சுவிஸ்), சுசீதா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னுத்துரை, குணரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகநாதன் (விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர், சண்டிலிப்பாய்க் கோட்டம்), சிவஞானசேகரம் (சுவிஸ்), சதீஸ்காந்தன் (ஹொலன்ட்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திலக்ஷன், ஜெலக்ஷா, ஜெலக்ஷனா, சுவர்ணா (சுவிஸ்), திவிஷா (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் விக்கினேஸ்வரா வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (15-07-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கு. ஜெகநாதன் (மருமகன்)
விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்,
சண்டிலிப்பாய்க் கோட்டம்.

*விக்கினேஸ்வரா வீதி,*
*நிற்சாமம்,*
*சங்கானை.*

(C/17440)

## திருமதி லீலாவதி (முத்துக்குமாரு ரீச்சர்)

நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) 14.07.2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு - சிவக்கொழுந்து தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற சபாரட்ணம் (முன்னாள் பிரதம இலிகிதர், R.V.D.B., உடவளவை) அன்புச் சகோதரியும், விக்னகுமார் (முன்னாள் மேற்பார்வையாளர், மஸ்கன் சிமெந்து தொழிற்சாலை, இரத்மலானை, கொழும்பு - V.J.எலெக்ரோனிக்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி) அவர்களின் அன்புத் தாயாரும் திருமதி கௌரீஸ்வரி விக்னகுமார் (நகரசபை - சாவகச்சேரி), பாஸ்கரன் (பிரான்ஸ்), திருமதி சூரியகலா தேவராசா (கொழும்பு), பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி மகேஸ்வரி சபாரட்ணத்தின் (ஓய்வு பெற்ற நெசவு மேற்பார்வையாளர்) அன்பு மைத்துனியும், றொசானி, சிருளி, அபிநாத், சிலானி, கோபிநாத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-07-2001) ஞாயிற்றுக் கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விக்னகுமார்
(மகன்)

*மணியகாரன் ஒழுங்கை,*
*(யாழ்ப்பாணக் கல்லூரி அருகில்)*
*வட்டுக்கோட்டை.*

(C/17441)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.